எக்ஸ்னோராவின் துவக்க விழா 1989ல் தேனாம்பேட்டை காமராஜ் அரங்கத்தில் நடைபெற்ற முதல் கூட்டத்தில் ஏ.சுவாமிநாதன், ஐ.ஏ.எஸ்., உணவுச் செயலாளர் மற்றும் இந்து பத்திரிக்கையின் ஆசிரியர் ஸ்ரீராம், தமிழக அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம், ஆயிரம் விளக்குத் தொகுதி எம்.எல்.ஏ., மு.க.ஸ்டாலின் மற்றும் நிர்மல் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

எக்ஸ்னோராவின் முதற்பொதுக்கூட்டம் ஏப்ரல் 20-1991ல் நடைபெற்றது "எக்ஸ்னோரா கிளப்" என்பதை "எக்ஸ்னோரா இன்டர்நேஷனல்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டு மாவட்டங்கள், மாநிலங்கள் மட்டுமின்றி உலக அளவில் எக்ஸ்னோரா விரிவுப்படுத்தப்பட்டன.

எக்ஸ்னோரா அமைப்பு மாநகராட்சி, திடக்கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தி சுகாதாரத்தைப் பராமரிக்கவும் குடிசைப் பகுதிகளில் மாசு ஏற்படாதவாறு கட்டுப்படுத்தவும், மக்கள் வாழும் பகுதிகளில் சுற்றுப்புற சுகாதாரத்தைப் பாதுகாக்கும் கொள்கையில் வெற்றி கண்டு வருகிறது.

"சமுதாயம் உனக்கு என்ன செய்தது என்று கேட்பதைத் தவிர்த்து சமுதாயத்திற்காக நீ என்ன செய்தாய்" என்று

உங்களுக்குள்ளேயே கேட்டுக் கொள்ளுங்கள் என்ற செய்தியை எக்ஸ்னோரா அமைப்பானது சமுதாயத்தில் மக்களிடையே வெற்றிகரமாகப் பரப்பி வருகிறது.

இதுவரையான காலங்களில் மக்கள் இயக்கமாகிய எக்ஸ்னோரா அமைப்பு குப்பையில்லா நகரை உருவாக்குவதிலும், சுகாதாரத்தை பேணிக் காப்பதிலும் வெற்றி கண்டு வருகிறது. எக்ஸ்னோரா இயக்கம் கிராமங்களிலும், நகரங்களிலும் மாநகரங்களிலும் மக்களின் ஒத்துழைப்போடு படிப்படியாக வளர்ச்சி யடைந்து வருகிறது.

எக்ஸ்னோரா அமைப்பு சென்னையில் மட்டும் ஏறக்குறைய 5000 கிளைகளையும், 2,00,000 உறுப்பினர்களையும் 25,000 இளைஞர்களையும் கொண்டு கடந்த 10 வருட காலமாகப் பெருமையுடன் இயங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் 10,000க்கும் மேற்பட்ட அமைப்புகளும் இந்தியாவில் 3,000க்கும் மேற்பட்ட கிளைகளுடனும், வெளிநாடுகளில் 100க்கும் மேற்பட்ட கிளைகளுடனும் செயல்படுகிறது. தூய்மையைப் பாதுகாக்கவும், ஆரோக்கியமான, சுகாதாரக் கேடுகள் இல்லாத வாழ்க்கையை மேற்கொள்ளவும், வளர்ந்து வரும் நாடுகளான இலங்கை, வங்காளதேசம் மற்றும் மௌரீஷியஸ் ஆகிய நாடுகளில் வாழும் மக்கள் எக்ஸ்னோரா அமைப்பின் கொள்கைகளைப் பின்பற்றி வருகின்றனர்.

**எக்ஸ்னோரா அமைப்பின் நோக்கங்கள் :**

வாழ்க்கையின் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைச் செயல்முறை படுத்தி முயற்சி செய்யும் வேளையில் எக்ஸ்னோரா அமைப்பானது ஒரு கருப்பொருளாக இருந்து மக்களை வழி நடத்திச் செல்வதே இதன் அடிப்படை நோக்கமாகும்.

உலகை மக்கள் வாழ்வதற்கேற்ற இடமாக உருவாக்கவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், மக்களின் வளர்ச்சிக்கு இடையூராக இருக்கும் பிரச்சனைகளைத் தீர்க்கவும், திட்டங்களை வகுத்து அதனை நடைமுறைப் படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

சுற்றுப்புறத்தூய்மையைப் பாதுகாத்தல் பற்றி பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது இந்த அமைப்பின் நோக்கம் ஆகும்.

மக்கள் தமக்குத் தேவையான சுகாதார வசதிகளைத் தமக்குத்தாமே செய்து கொள்ள வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் செயல்படப் பயிற்சி அளிப்பது இதன் நோக்கமாகும்.

சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்கவும், தூய்மையைப் பராமரிக்கவும், ஆரோக்கியமான சுகாதாரத்தை ஏற்படுத்தவும் மக்களை பாதிக்காத வண்ணம் சில சட்டங்களை வெளியிடுதல்.

சமுதாயத்தின் எல்லா இடங்களிலும் வாழும் மக்களாகிய ஏழைகள், பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள் மூலமாகப் போதை பொருட்களையும், மதுப்பழக்கத்தை ஒழிக்கும் திட்டங்களையும் செயல்படுத்துதல்.

சமுதாயத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையைக் குறைக்கவும், மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள் ஆகியவற்றைச் செயல்படுத்தவும் சங்கங்களை அமைத்தல் போன்றவையாகும்.

பசுமைப்பணி எக்ஸ்னோரா, மாணவர் எக்ஸ்னோரா என எக்ஸ்னோரா அமைப்பின் பணி பிரிவுகள் மற்றும் செயல்பாடுகள் 50க்கும் மேற்பட்டவையாக உள்ளன. ஒவ்வொரு பணி பிரிவுக்கும் செயல்பாடுகளுக்கும் குழுவை ஏற்படுத்தி பணிசெய்து வருவது குறிப்பிடத்தக்க செயலாகும்.

**தமிழக மாவட்டங்களில் எக்ஸ்னோராவின் வளர்ச்சி:**

1989ம் ஆண்டு சென்னையில் எக்ஸ்னோரா தொடங்கப்பட்ட பிறகு, 1991ல் முதல் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. அப்போது பன்னாட்டு எக்ஸ்னோரா என அதன் பெயர் மாற்றப்பட்டது.

இதன் கிளைகள், திருச்சியில் 1994-95லும், பின் திருவண்ணாமலையிலும்,வேலூரிலும் 1996, 1999லும்; கோவையில் அதே வருடத்திலும் நீடாமங்கலத்தில் 2000லும் துவங்கப்பட்டன. நாகையில் 1991ல் ஜான் அலெக்ஸ் என்பவர் இன்னவேட்டர்ஸ் கிளப் எனத்துவங்கி பின் எக்ஸ்னோரா கிளைகளாக மாற்றினார்.

நெல்லை மாநகரில் 1996ல் தொடங்கி சுமார் 40 கிளைகள் செயல்பட்டு வருகின்றன.

பாகிர்தர் என்பவர் தூத்துக்குடி கிளைகளுக்கும் தியாகராஜன் குமரி கிளைகளுக்கும் கணேசர் காஞ்சிபுரம் கிளைகளுக்கும் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளனர்.

எக்ஸ்னோராவின் முதல் சுற்றுப்புறச்சூழல் மாநாடு 1996ல் சென்னை சீரணி அரங்கில் முதல்வர் மு.கருணாநிதி பங்கேற்று நடைபெற்றது. பூஜ்யக் குப்பைத் திட்டம் குப்பையை எருவாக்கும் திட்டம், மருத்துவக் கழிவுகளை எரித்தல், வாகனப்புகைக் கட்டுப்படுத்துதல், நீர்நிலை மாசுகளைத் தடுத்தல், பூங்காக்களைப் பராமரித்தல் போன்ற திட்டங் களுக்கான தீர்மானங்கள் நிறைவேறின.

**சிவிக் எக்ஸ்னோரா :**

சிவிக் எக்ஸ்னோரா என்பது சமுதாய சமய அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பு. வாழ்க்கையின் தரத்தை உயர்த்திக் கொள்ளும் வகையில், சாலைகளிலும் குடியிருப்புகளிலும் ஏற்படும்

உட்பூசல்களையும், சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பாதுகாப்பதிலும் ஏற்படும் பிரச்சனைகளை தீர்ப்பதும் இதன் நோக்கமாகும்.

1989ல் பெசன்ட் நகரிலுள்ள காமராஜ் நகரில் முதலில் சிவிக் எக்ஸ்னோரா கிளை ஏற்படுத்தப்பட்டது.

மக்களை ஒன்று திரட்டி அனைவரும் ஒற்றுமையுடன் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளத் தமக்குத்தாமே – உதவி செய்து கொள்ளும் ஒரு இயக்கம் தான் சிவிக் எக்ஸ்னோரா.

இந்தியாவில் ஏறக்குறைய 5000 சிவிக் எக்ஸ்னோரா கிளைகள் இயங்கி வருகின்றன. சிவிக் எக்ஸ்னோரா என்பது எக்ஸ்னோரா அமைப்புடன் இணைந்த அமைப்பாகும். எக்ஸ்னோரா அமைப்பின் அடிப்படை கருத்துக்களுக்கும், கொள்கைகளுக்கும் ஆதரவு அளித்து எல்லாவற்றிலும் வளைந்து கொடுத்து அதன் வளர்ச்சிக்குக் காரணமாக இருப்பது சிவிக் எக்ஸ்னோரா.

குப்பைகளை அகற்றித் தூய்மைப்படுத்துவது மட்டுமல்லாமல் குடியிருப்புகளில் மக்களிடையே ஏற்படும் பிரச்சனைகளைச் சிறந்த தனித்தன்மை வாய்ந்த புதுமையான கருத்துக்களைக் கொண்டு தீர்த்து வைத்தும் செயலாற்றி வருகிறது.

நகராட்சிக் கவுன்சிலர்கள், அலுவலர்கள் – குடிநீர் வழங்கும் வாரியத்தில் பணியாற்றும் அலுவலர்கள் ஆகியோருக்கும் இடையே நேருக்கு நேர் பேசித் தொடர்பு கொள்ளும்படி கூட்டங்களைக் கூட்டி, மக்கள் தங்கள் பிரச்சனைகளை எடுத்துக் கூற சிவிக் எக்ஸ்னோரா ஏற்பாடு செய்கிறது. இதனால் அலுவலர்களும் மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இந்த வகையில் சிவிக் எக்ஸ்னோரா அரசுக்கும், பொது மக்களுக்கும் இடையே நெருங்கிய உறவை ஏற்படுத்தும் பாலமாக இயங்கி வருகிறது.

கடந்த 10 ஆண்டுகளில் சிவிக் எக்ஸ்னோரா நாட்டின் பல்வேறு கிராமங்களிலும், நகர் புறங்களிலும், மாநகரங்களிலும் செயலாற்றி நல்ல வளர்ச்சியடைந்து வருகிறது. வளர்ந்து வரும் நாடுகளில் குடியிருக்கும் மக்கள் எக்ஸ்னோரா அமைப்பின் உதவியால் தூய்மையுடனும் நல்ல சுகாதாரத்துடனும் கூடிய ஆரோக்கியமான வாழ்வை மேற்கொள்கின்றனர்.

1. குப்பைகளைச் சேகரித்து முறையாக அப்புறப்படுத்துவது.
2. தெருக்களில் மின் விளக்குகள் எரியச்செய்தல்.
3. சாலைப் பராமரிப்பு.
4. கழிவுப் பொருட்களை அகற்றி மழை நீரைத் தேங்க விடாமல் தூய்மைப்படுத்துவது.

போன்ற பணிகளை செய்து வரும் சிவிக் எக்ஸ்னோரா ஒரு அரசு சாரா நிறுவனமாக இயங்கி வருகிறது. சிவிக் எக்ஸ்னோரா என்ற இச்சங்கம் தமது பணிகளில் சில பகுதிகளில் வெற்றியோடு வளர்ச்சியடைந்து வருகிறது. சில பகுதிகளில் பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்மையால் தோல்வி அடைந்தும் இருக்கிறது. எனினும் சென்னை மாநகரில் மட்டும் ஏறக்குறைய 1000 சிவிக் எக்ஸ்னோரா சங்கங்கள் வெற்றிகரமாகச் செயல்புரிந்து வருகின்றன.

**முடிவுரை :**

சமுதாயத்தில் உள்ள நடுத்தர மற்றும் குடிசைப் பகுதி மக்களுக்கு எக்ஸ்னோரா அமைப்பின் பணிகள் சென்றடைந்து முன்னேற்றம் கண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

சமுதாயப் பணிகள் செய்து சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வரும் எக்ஸ்னோரா பெண்கள், இளைஞர்கள், மாணவர்கள், குழந்தைகள், முதியோர் மற்றும் உடல் ஊனமுற்றோர் என அனைத்து பிரிவினரும் பங்கேற்று செயல்படும் அமைப்பாகவும், அவர்களின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றம் அடையவும், சுற்றுப்புற சுகாதாரத்துடன் வாழவும், பல சேவைகள் செய்தும் சமுதாயத்தில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியும் அமெரிக்காவிலிருந்து – அருப்புக் கோட்டை வரை குவியும் குப்பைகளை அகற்றிச் சுத்தம் செய்து குப்பையை எருவாக்கி (பூஜ்ய குப்பைத் திட்டம்) மீண்டும் மரம், செடி, கொடிகளுக்கு பயன்படுத்தும் முறை அறிமுகப்படுத்திக் குப்பைக்கும் குட்டை சொல்லும் அமைப்பாகவும், நீர் நிலை மற்றும் காற்று மாசுபாடு ஆகிய சுற்றுச்சூழல் பணிகளையும் மேற்கொண்டு மக்கள் சுகாதாரத்துடனும், தூய்மையான வாழ்க்கையை மேற்கொள்ளவும் எக்ஸ்னோரா அமைப்பு பணியாற்றி வருகின்றது.

மக்கள் தொகையை மக்கள் சக்தியாக மாற்றும் பணியை எக்ஸ்னோரா அமைப்பு மேற்கொள்வதுடன் நேருக்கு நேர் நிகழ்ச்சி மூலம் அரசாங்கத்துடன் தொடர்பு ஏற்படுத்தி அரசாங்கத்தின் செயல்பாடுகளை அறிய வைத்து மக்களின் முழு ஒத்துழைப்பையும் அரசாங்கத்திற்குப் பெற்று தந்து, மக்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் தீர்வு ஏற்படுத்துவதுடன் மக்களுக்கும், அரசாங்கத்திற்கும் இடையே ஓர் சக்தி வாய்ந்த இணைப்புப் பாலமாக எக்ஸ்னோரா அமைப்பு செயல்பட்டு வருகின்றது.

இளைஞர்கள் மாணவர்கள் நலனுக்காக பாடுபட்டு வரும் எக்ஸ்னோரா அமைப்புகளும் நமக்கு நாமே (Self-Help) என்ற முறையில் தங்கள் பிரச்சனைகளைத் தாங்களே தீர்க்கும் முறையில் இளைஞர்களை வைத்தே அப்பகுதியின் சமுதாய மற்றும் சுற்றுச்சூழல் பணிகள் செய்து வருகின்றன. இளைஞர்களின் வேலைவாய்ப்பு மையமாகவும் எக்ஸ்னோரா அமைப்பு செயல்பட்டு, இளைஞர்களிடையே உந்துதல் சக்தி ஏற்படுத்திச் சமுதாய மாற்றம் ஏற்படுத்தி வருகிறது. இளைஞர் எக்ஸ்னோரா அமைப்புத்தான் எக்ஸ்னோரா அமைப்பின் ஆணிவேர்.

★ ★ ★

## வரதட்சனை

– அ. முத்துமணி, I B.A., (Hist)

❖ கற்புக்காக தன்னை
தீயிலிட்ட சீதை,
நீதிக்காக மதுரையை
தீயிலிட்ட கண்ணகி
வரிசையில்,
வரதட்சனைக்காக தன்னை
தீயிலிட்ட எங்கள் வீட்டுப்
புதுமைப் பெண்!
அவள் தவறு செய்யாததால்
உயிர் பெற்றாள்!
அவன் தவறை உணர்ந்ததால்
உயிர் பெற்றது!
ஆனால்...
விலை பேசிய தாய்
விலை போன மகன்
செய்த தவறால்
எங்கள் வீட்டுப்
புதுமைப்பெண்
உயிர் பெறுவது
எப்போது ?

★★★

## LIFE

| | | |
|---|---|---|
| Life is a Book | - | Read it |
| Life is a Gift | - | Accept it |
| Life is a Game | - | Play it |
| Life is a Challenge | - | Face it |
| Life is a Goal | - | Achieve it |
| Life is a Target | - | Grasp it |
| Life is a War | - | Struggle it |
| Life is a Poem | - | Love it |
| Life is a Festival | - | Celebrate it |

- D. Jerry Bastin, II B.Com., (R)

★★★

## பிரார்த்தனை...!

– வி. சவரிராஜ், III B.Sc., (Phy)

❖ வலிமையைத் தரக்கேட்டேன்
கடவுள் என்னை வலிமை
மிக்கவனாக உருவாக்க
கஷ்டங்களை அளித்தார் !

❖ ஞானத்தை அறிவை அளிக்கும்படி கேட்டேன்
பிரச்னைகளை நிறையவே தந்து
அவைகளைத் தீர்க்க அறிவை
உபயோகிக்கச் செய்தார் !

❖ தைரியமாகத் திகழ வேண்டும் எனக்கேட்டேன்
அபாயகரமான நிகழ்வுகளை ஏற்படுத்தி
அவைகளை எதிர்கொள்ளச் செய்தார் !

❖ வாழ்க்கையில் கருணையுடன் விளங்க
அருள் புரியும்படி கேட்டேன்
கஷ்டங்களுடன் போராடுபவர்களைச்
சந்திக்கச் செய்து அவர்களுக்கு
உதவி செய்ய வைத்தார் !

❖ நான் கேட்ட எதுவும்
கிடைக்கவில்லை ... ஆனால்
என்னென்ன தேவையோ
அவை அனைத்தும் கிடைத்தன...!

★★★

## கிராமிய விடுகதைகள் !

❖ பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன?
– பச்சைக்கிளி

❖ சின்ன மச்சான் குனிய வச்சான் அது என்ன?
– முள் குத்துதல்

❖ ஒகோ ! மரமே ! ஒசந்த மரமே ! ஒரு கொத்து இலைக்கு தரங்கெட்ட மரமே ! அது என்ன? – கள்ளி

❖ நைட்டு பிறந்த பிள்ளை வயித்தாலே போகுது அது என்ன? – பாம்பு.

## பழமொழி

❖ மனிதன் வெற்றியில் கற்பது குறைவு. தோல்வியில் கற்பதோ அதிகம். – கவிஞர்.

❖ காலத்தை தீர்மானிக்க நாம் தவறினாலும் காலம் தான் தீர்மானித்ததை நடத்தியே தீரும். – காமராஜர்.

- L. Marimuthu, III B.Sc., (C)

# HISTORY




Dr. S. Manickam at PG History Academy




Prof. A.N. Narayanagurumurthy
on Non-alignment



Mr. R. Raja gets the Rank Holder's Award




Receiving Prize from Dr. S. Kanagavelrajan,
Principal, SBK College.




History Day - A Skit by Our Students





History Day - Dance by Our Students


# COMMERCE



Seminar on BUDGET 2002




Seminar on E-BUSINESS




Guest Lecture by Mr S. Raju, LIC




Cultural Programme




Journalism Courses Inauguration



Mr. M. Balan, Pandian Grama Bank, Chatrapatti on Mobilsation of Savings in Commercial Bank

## கல்லூரி பூக்கள்

– ஜி. வித்யாதரன், எஸ்.ரமேஷ் செல்வகுமார், ஆர்.லோகேஸ்வரன்,ஜி.எஸ்.சண்முகவேலு, II B.Sc., (Che)

❖ மாலையாகும் மலர்கள் எத்தனையோ !
நாட்டையாளும் மாணவர்கள் எத்தனையோ !
மாலையாகும் மலர்களும் எத்தனையோ !
நாட்டையாளும் மாணவர்களும் நாங்கள்தான் !

❖ பொழுதை போக்க வந்திடவில்லை
புத்தியைத் தீட்ட வந்திருக்கிறோம் !
காதல் செய்ய வந்திடவில்லை
கல்வி கற்க வந்திருக்கிறோம் !

❖ திரைகடலோடி திரவியம் தேடுவோம்,
சொந்த நாட்டிலே சொர்க்கம் அமைப்போம் !
ஆழ்கடலையும் ஆராய்ச்சி செய்வோம்,
ஆண்டவனையும் நேரில் காண்போம் !

❖ எல்லாம் செய்வோம் நம் நாட்டில்
நற்பெயர் பெறுவோம் அயல்நாட்டில்
இளைஞரே! இன்றே வாருங்கள்
கரங்களை ஒன்றாய் உயர்த்துங்கள் !

❖ செம்மையான இந்தியாவை உருவாக்க
செந்தமிழை நன்றாய் வளர்த்தெடுக்க
மாணவ மணிகளே விரைந்திடுவோம்
மணம் வீசும் கல்லூரிப் பூக்களாக ....!

★★★

## FOR ME

❖ Learn by listening. Understand by reflecting.

❖ Reading without thinking is like eating without degesting.

❖ Put a grain of holders into everything you do.

❖ A short pencil is better than a long memory.

❖ The greatest loss is the loss of self-confidence.

❖ Great minds have purposes, other have wishes.

❖ Make new friends, but keep the old; these are silver, these are gold.

(From Mahyo Dirary)

- S. Suriaprakash, III B.Sc., (M)

## ஓ..! இளைஞனே ...!

– பி. சரவணக்குமார், II B.Sc., (Maths)

❖ உனது முடிவில்லாத முயற்சியால்
எல்லையில்லா வானத்தையும்
எளிதில் அடையலாம் !

❖ தன்னம்பிக்கையோடு
நீ எழுந்து நின்றால்
இமயம் கூட
உனக்கு இடுப்பளவுதான் !

❖ நீயே ஒரு எரிமலை
என்பதை மறந்து விடு
அனலுக்காக ஏன் அலைகிறாய் !

❖ படுத்துக் கிடப்பவனுக்கு
பகல் கூட இரவுதான்
எழுந்து நடப்பவனுக்கு
திரும்பும் திசையெல்லாம் கிழக்குதான் !

❖ விழிக்கவில்லை என்றால்
சூரியன்கூட
ஒரு கரித்துண்டுதான் !

❖ உனது சூரிய விழிகளைத் திறந்திடு !
துயர இரவுகள் குளிர்ந்து
பனி மலையாகும் தோல்விகள்
உன்னிடம் தோற்றுப்போகும் !

★★★

## ஹிட்லர் வாழ்க !

ஹிட்லர் ஒரு சமயம் ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு சென்று பார்வையிடப் போனார். அவர் வருவதை முன்னமே அறிந்திருந்த டாக்டர்கள் மன நோயாளிகளிடம் ஹிட்லர் வாழ்க என்று அவர் வரும் போது கோசம் எழுப்ப வேண்டும் என சொல்லிக் கொடுத்தனர். ஹிட்லர் பார்வையிட வந்தபோது அனைவரும் ஹிட்லர் வாழ்க என கோஷமிட்டனர்.

அந்தக் கட்டத்தில் ஒருவர் மட்டும் அமைதியாக நின்று கொண்டிருந்தார். ஹிட்லர் அவரிடம் சென்று நீங்கள் மட்டும் ஏன் கோசம் எழுப்பவில்லை எனக் கேட்டார். அதற்கு அவர் "நான் பைத்தியக்காரன் அல்ல, நான் டாக்டர்" என பதிலளித்தார்.

– அகஸ்டின் அன்புராஜ், III B.Sc., (C)

# சுதந்திர வேள்வியில் ராஜபாளையம் தேசாபிமானிகள்

– Dr. V. வெங்கட்ராமன், M.A., M.Phil., Ph.D.,

இந்திய சுதந்திர வேள்வியின் போது, அன்றைய ஏகாதிபத்ய பிரிட்டிஷ் அரசின் ஆவணங்களில் அகில இந்திய அளவில் வளர்ந்து வரும் மூன்று நகரங்களின் பங்கெளிப்பினை பின்வருமாறு வர்ணித்துள்ளது. மகாராஷ்டிரத்திலுள்ள "வார்தா", ஆந்திர மாநிலத்தில் உள்ள "பீமாவரம்", தமிழ்நாட்டில் உள்ள "இராஜபாளையம்" ஆகிய இம்மூன்று நகரங்களை ஆபத்தான நகரங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சிறிய நகரங்களாக இருந்தாலும் தேசிய அளவில் அனைத்து போராட்டங்களையும் நடத்திக் காட்டி பிரிட்டிஷ் போலீஸூக்கு சிம்ம சொப்பனமாக விளங்கி யிருந்திருக்கின்றன. 1905ம் ஆண்டு வங்கம் இரண்டாக பிரிக்கப்பட்டதும், திலகரை தலைவராகக் கொண்டு வ.உ.சிதம்பரம் பிள்ளை, பாரதி, சுப்பிரமணிய சிவா போன்றவர்கள் சுதேசி இயக்கத்தை வலுவான இயக்கமாக தமிழகத்தில் ஏற்படுத்திக் கொண்டிருந்த அதே சமயத்தில் ராஜபாளையத்திலும் தீவிரவாத தேசிய இயக்கம் வலுப்பெறத் துவங்கியது.

1906ம் ஆண்டு ராஜபாளையம் நகரில் பி.எஸ். சின்னவெங்கட் ராஜா, சுப்பராய பிள்ளை, பி.ஏ.பி.எல்., அழக ராஜா போன்றோர்களால் சுதேசி இயக்கம் துவக்கி வைக்கப்பட்டது. 1908ம் ஆண்டு ஜூன் வ.உ. சிதம்பரம், சுப்பிரமணிய சிவாவையும் ராஜ துவேவு குற்றத்திற்காக கைது செய்து பல ஆண்டுகள் சிறைத் தண்டனை கொடுக்கச் செய்ததுடன், வ.உ.சி.யை மனிதாபிமானமில்லாமல் கொடுமைப் படுத்தியதைக் கண்டு, வெகுண்டு எழுந்த பாரதிக்கு ஆதரவாக இவர்களும் செயல்பட்டனர். பாரதியின் "இந்தியா" பத்திரிக்கை பாண்டியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த போது, 1909ம் ஆண்டு ஒரு விளம்பரம் வருகிறது. அதில் "வ.உ.சிதம்பரம் பிள்ளை மற்றும் சுப்பிரமணிய சிவா" ஆகியோர்களுக்கு சிறைவாசம் அளித்து, கொடுமைப்படுத்தி இவ்விருவரையுயம் இந்நிலைக்குக் கொண்டு வந்த திருநெல்வேலி மாவட்ட நீதிபதி வின்ஞ் என்பாரின் தலையை கொய்கின்றவருக்கு ரூபாய் ஆயிரம் சன்மானம் வழங்கப்படும். இப்படிக்கு "ராஜபாளையம் தேசபக்தர்கள்" என்ற விளம்பரம் வெளி வந்துள்ளதைப் பார்க்கின்றபோது, ராஜபாளையம் தேசபக்தர்களுக்கும் பாண்டியிலுள்ள "இந்தியா" அலுவலகத்திற்கும் குறிப்பாக பாரதிக்கும் மிக நெருக்கமான தொடர்பு இருந்திருந்ததை மெட்ராஸ் சீக்ரெட் போலீஸ் குறிப்புகள் 1908–1909 VOL-XI லிருந்து காண முடிகின்றது. சுதேசி இயக்கத்தையும், வ.உ.சி.யின் சுதேசிக் கப்பல் கம்பெனியையும் நசுக்கிய வேகத்தோடு, சுதேசி இயக்க கிளைகளையும் பிரிட்டிஷ் அரசு ஒரு கை பார்த்தது. நகரின் சுதேசி இயக்கத் தலைவர்கள் பல வழிகளில் இன்னல்களை சந்தித்ததோடு இயக்கத்தையும் கை விட்டனர். சுதேசி இயக்கம் தோல்வி கண்டதைத் தொடர்ந்து டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையாரின் தலைமையில் "ஹோம்ரூல் இயக்கம்" இந்திய மக்களுக்கு புதிய அத்யாயத்தினை ஏற்படுத்தியது. எங்கோ ஒரு கிராமத்தில் ஹோம்ரூல் இயக்கம் நடத்தியதால், போலீஸாரது பார்வைக்கு பரம எதிரியாக தோன்றிய இ.பூ. அரங்கசாமி ராஜா அக்கிராமத்தை விட்டு விட்டு நகருக்குத் திரும்பினார். இ.பூ. அரங்கசாமி ராஜாவின் வருகை, நகருக்கு புதிய தெம்பினை மீண்டும் பெறுவதற்கு வழிவகுத்தது. அரங்கசாமி ராஜாவைத் தொடர்ந்து அவரால் தேசிய பாதைக்கு அடையாளம் காட்டப்பட்ட பி.எஸ்.குமாரசாமி ராஜா, பி.எல். துரைசாமி ராஜா, ஏ.கே.டி. பலராம ராஜா, பி.எஸ்.வஸந்தன் என பல இளைஞர்கள் தாய்திருநாட்டின் விடுதலைக்கு தோள் கொடுக்கத் தயாராகினர்.

தமிழக வரலாற்றில் சுதந்திரப் போரில் அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்ட வீரர்கள் கொண்ட போராட்ட களமாகவும், 1930லும், 1942ம் ஆண்டிலும் இரண்டு முறை போராட்ட வீரர்களின் மீது போலீஸ் துப்பாக்கிச்சூடும் நடத்தப்பட்டதும், பல மாதங்கள் விட்டு விட்டு போலீஸ் கேம்ப்களும், மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் குவிப்பும் போடப்பட்ட ஒரே களமாகவும், மாவட்ட அளவு காங்கிரஸ் ரகசிய மாநாடும், மாவட்ட அளவில் முதலில் சிறைக்குச் சென்ற கே.எம். மஞ்சம்மாள் போன்ற தியாகங்களையும் செய்து தேசத்தின் விடுதலைக்கு வித்திட்டவர்கள் ராஜபாளையம் தேசாபிமானிகள். இவர்களில் ஒரு சில தியாக சீலர்களின் பங்கினை தனித்து கொடுத்து எடுத்து வழங்குவதே இக்கட்டுரையின் சாராம்சமாகும்.

**இ.பூ. அரங்கசாமி ராஜா (1886 – 1950):**

காந்தியப் போராட்டத்தில் தீவிர பற்று கொண்டவர். கதர் இயக்கத்தில் தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்ட அரங்கசாமி ராஜா, கொடிக்குளம் கிராமத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் தான் ஹோம்ரூல் இயக்கம் ஆரம்பிக்கப் பட்டது. கிராமங்கள் தோறும் ஹோம்ரூல் இயக்கத்தினை தீவிரமாக நடத்திய

ஒரே காரணத்திற்காக கொடிக்குளம் ஜமீன்தாரால் பிரிட்டிஷ் அரசுக்கு பணிந்து, இவரை கிராமத்தை விட்டு வெளியேற்றினர். 1916ம் ஆண்டு நகருக்கு வந்ததும், சின்ன வெங்கட்ட ராஜா, டி.கே. அழக ராஜா போன்றோர்களுடன் இணைந்து நகரில் ஹோம் ரூல் இயக்கத்தினை தீவிரமாக களமேற்றினார். 1920ம் ஆண்டு நாக்பூரில் வைத்து நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டு, காந்தியடிகளின் புதிய தலைமையில் ஒத்துழையாமை இயக்கத்தை நெஞ்சில் ஏற்றிக்கொண்டு நகரில் இயக்கத்தை களமிறக்கியவர். காந்தியடிகள் அன்னியத்துணி பகிர்வுகளிப்பினை ஆரம்பித்ததும், ராஜபாளையத்தில் ஏன்? இன்றைய ராமநாதபுரம் மாவட்டத்திலேயே முதன் முறையாக 1922ம் ஆண்டு ஜனவரி 12ம் நாள் மாலை 4.30 மணியளவில் அன்னியத் துணிகளை குவித்து தீயிட்டு கொளுத்தி பிரிட்டிஷ் எதிர்ப்பு போராட்டத்தை துவக்கினார். பிரிட்டிஷ் போலீஸாரால் உடனடியாக கைது செய்யப்பட்டு மாவட்டத்தின் முதல் சிறைக் கைதியாக ஒருவாரம் கடுங்காவல் தண்டனை பெற்றார். இவரது விடுதலையை ஜனவரி 19ம் நாள் மாபெரும் ஊர்வலம் நடக்கவிருப்பதை அறிந்த போலீஸ் அரங்கசாமி ராஜாவை ஜனவரி 18ம் நாள், ஒரு நாள் முன்பாகவே விடுதலை செய்து, யாருக்கும் தெரியாமல் போலீஸ்வேனில் ஏற்றி இவரது வீட்டில் இறக்கி விட்டுச் சென்றது. ஆனால் மாவட்ட காங்கிரஸ் திட்டமிட்டபடி இவரை பாராட்டி ஊர்வலம் நடத்தியது. பிரிட்டிஷ் இளவரசர் இந்தியா வருகையை எதிர்த்து ராஜபாளையத்தில் அதே மாதத்தில் "ஹர்த்தால்" நடத்தி மக்களின் எதிர்ப்பினை காட்டினர்.

1921ம் ஆண்டு அக்டோபர் 26ம் நாள் ராஜபாளையம் கொராட்டின நூல் நெசவுத் தொழிற்சாலை என்ற ஒரு கதர் உற்பத்தி நிறுவனத்தை மக்களிடமிருந்து பங்குத் தொகை பெற்று இவரால் துவக்கப்பட்டது. 1925ம் ஆண்டு பிரிட்டிஷ் அரசின் நிர்ப்பந்தத்தால், இக்கம்பெனியில் உற்பத்தியான கதர் சிட்டங்களை வாங்கக்கூடாது என தடை விதித்தது. இதனால், பல ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கதர் பொருட்கள் தேங்கியது. இதனைக் கண்டு வெகுண்ட அரங்கசாமி ராஜா 1925ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ம் நாள் முதல் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார். ரூபாய் 12000 பெறுமான கதர் விற்பனை ஆகும் வரை விரதத்தை முடிக்கப் போவதில்லை என முடிவெடுத்தார்.

1927ம் ஆண்டு நகருக்கு காந்தியடிகள் வரச்செய்து, "காந்தி கதர் வஸ்திராலயம்" என்ற புதிய லிமிடெட் கம்பெனியை குமாரசாமி ராஜாவுடன் இணைந்து துவக்கி, அதனை காந்தியடிகளது திருக்கரங்களாலேயே துவக்கி வைக்கச் செய்தார். 1930ம் ஆண்டு ராஜாஜியின் தலைமையில் திருச்சி முதல் வேதாரண்யம் வரை நடத்தப்பட்ட உப்பு சத்யாகிரகத்தில் கலந்து கொண்ட 100 பேர்களில், நகரிலிருந்து அரங்கசாமி ராஜாவின் தலைமையில் ஆறுபேர் அதில் கலந்து கொண்டனர். உப்புசத்யாகிரகத்தில் ராஜாஜியின் தளபதியாக செயல்பட்டவர். அதனால் ஓராண்டு சிறைத் தண்டனையை பெற்றார். 1932ம் ஆண்டு சட்ட மறுப்பு இயக்கத்தின் போது, காந்தியடிகள் கைதை ஜனவரி 6ம் நாள் இரண்டு கண்டன ஊர்வலங்கள் ஒன்று அரங்கசாமி ராஜா தலைமையிலும், மற்றொன்று பிள்ளையார்சாமி தேவர் தலைமையிலும் நடந்த போது, பிரிட்டிஷ் போலீஸாரார் தடியடி பிரயோகம் செய்ததால் அரங்கசாமி ராஜா உடல் முழுவதும் 12 இடங்களில் ரத்தக் காயம் ஏற்பட்டது. அன்று மாலை, மறுபடியும் அனைவரும் ஒன்று சேர்ந்து போலீஸாரின் அராஜகத்தை எதிர்த்து ஊர்வலம் வந்த போது, அரங்கசாமி ராஜாவை கண்மூடித்தனமாக அடித்து, இழுத்து, ரோட்டில் தரதரவென்று இழுத்துச் சென்று போலீஸ் நிலையத்தில் தலைகீழாக தொங்கவிட்டு உணர்விழந்து போகும் வரை மிருகத்தனமாக தாக்கி தூக்கியெறிந்தனர். அவருக்கு இரண்டு ஆண்டு கடுங்காவல் தண்டனை போடப் பட்டது. இதே போல், கள்ளுக்கடை மறியல், அன்னியத் துணிக்கடை மறியல் மற்றும் தேசிய மாநாடுகளில் கலந்து கொண்டு திரும்புவது போன்ற அனைத்து தேசிய போராட்டங்களையும் வெற்றிகரமாக நடத்திக் காட்டினார். 1933ம் ஆண்டிலிருந்து 1947ம் ஆண்டு வரை கதர் போர்டு பணிக்காக சின்ன சேலம் போன்ற பகுதிகளில் உழைக்க வந்தவர். காந்தியடிகள், நேரு, ராஜேந்திர பிரசாத் போன்ற தேசியத் தலைவர்கள் நகருக்கு வரும் போதெல்லாம் இவரது தேசியப்பணி கண்டு வியந்து பேசியுள்ளனர். 1950ம் ஆண்டு மே மாதம் 7ம் நாள் மரணமடைந்தார். நகர் மக்களால் "காந்தி அரங்கசாமி ராஜா" என்று அழைக்கப்படுபவராக கருதப் படுகிறார்.

**பி.எஸ். குமாரசாமி ராஜா (1898-1957)**

இந்திய மக்களின் ஜனநாயகப் போக்கிற்கு வழிகாட்டிய அப்பழுக்கற்ற அரசியல் தலைவராகவும், முன்னாள் ஒருங்கிணைந்த சென்னை மாகாணப் பிரதமராகவும், தமிழகத்தின் முதல் முதல்வராகவும், ஒரிஸா மாநிலத்தின் கவர்னராகவும் தேசியத் தொண்டாற்றிய பி.எஸ்.குமாரசாமி ராஜா, 1898ம் ஆண்டு ஜூலை மாதம் 8ம் நாள் ராஜபாளையத்தில் பூசப்பாடி சஞ்சீவி ராஜா – தாயம்மாள் தம்பதியின் ஒரே மகனாகப் பிறந்தவர். பிறந்த சில ஆண்டுகளில் தாய் தந்தையரை இழந்து பாட்டியினரால் செல்லமாக வளர்க்கப்பட்டவர். 1915 ம் ஆண்டு வரை ஸ்ரீவில்லிபுத்தூர் ஹிந்து கல்வி

நிலையத்தில் பயின்றவர். 1916ம் ஆண்டு அரங்கசாமி ராஜாவால் தீவிர அரசியலுக்கு கொண்டு வரப்பட்டவர். 1916 முதல் 1924ம் ஆண்டுகள் இளைஞராக அனைத்து போராட்டங்களிலும் தீவிர பங்கெடுத்து தலைமைப் பொறுப்பினை பெற்றுக் கொண்டவர். 1919ம் ஆண்டு காந்தியடிகள் சாத்தூர் வருவது அறிந்து பார்வையாளர் ஒருவராக நின்று அவரை தரிசித்து அதே காந்தியடிகள் 1927ம் ஆண்டும் 1934 ம் ஆண்டும் நகருக்கு அழைத்து வந்து தனது வீட்டில் சிறப்பு விருந்தாளியாக உபசரித்தார். 1920-22ம் ஆண்டுகளில் ஒத்துழையாமை இயக்கத்திலும், 1921ம் ஆண்டு நகரில் விவசாயிகள் சங்கத்தினையும், 1922ம் ஆண்டு ஹரிஜன சங்கத்தையும் நிறுவி அதன் செயலாளராக பணியாற்றி அனைத்து கிராமங்களிலும் இவற்றின் கிளைகளை நேரில் சென்று ஏற்படுத்தியவர். சட்ட மறுப்பு இயக்கம் தீவிரமடைந்த போது, 1931ம் ஆண்டு நகரில் உள்ள பல கள்ளுக்கடைகளில் மறியல் செய்தவர். 1932ம் ஆண்டு காந்தியடிகள் கைது செய்யப்பட்டதை எதிர்த்து, நகர் காங்கிரஸ் கமிட்டிக்கு தடை போடப்பட்டிருந்தும் அவற்றையெல்லாம் மீறி கண்டன போராட்டம் நடத்தியதால் ஓராண்டு கடும் காவல் தண்டனை பெற்றார். 1934ம் ஆண்டு டெல்லி சட்டசபைக்கு மதுரை - ராமநாதபுரம் - திருநெல்வேலி சார்ந்த வேட்பாளராக களமிறங்கி வெற்றி பெற்று 1937 வரை பதவியில் அமர்ந்தவர். 1937ம் ஆண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியின் வேட்பாளராக நின்று போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டவர். 1938ம் டிசம்பரில் 40வது தமிழ் மாகாண காங்கிரஸ் மாநாட்டினை ராஜாஜி, காமராஜர், ஓ.பி. ராமசாமி செட்டியார், வி.வி. கிரி போன்றவர்களை அழைத்து வந்து வெற்றி பெறச்செய்தவர். 1934ம் ஆண்டு காந்தியடி களையும், 1935ம் ஆண்டு நேரு மற்றும் ராஜேந்திர பிரசாத் போன்ற தேசியத்தலைவர்களை நகருக்கு அழைத்து வந்து மக்களிடையே தேசியம் வளர்த்தவர். இரண்டாம் உலகப் போரின் காரணமாக அனைத்து காங்கிரஸ் சட்டமன்றங்களும் ராஜினாமா செய்தபோது தனது சட்டமன்ற உறுப்பினர் பதவியை துறந்தார். தொடர்ந்து தனிநபர் சத்தியாகிரகத்தில் பங்கெடுத்து பிரிட்டிஷ் அரசால் 9 மாதம் சிறை தண்டனை பெற்று திரும்பினார். 1942ம் ஆண்டு மாகாண காங்கிரஸ் முக்கிய தலைவர்கள் ஒருவராக பதவியேற்றார்.

1946ம் ஆண்டு டி.பிரகாசம் மந்திரிசபையில் விவசாயத்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சராக பதவியேற்று, 1947ம் ஆண்டில் தனது பதவியை ராஜினாமா செய்தார். 1949ம் ஆண்டு ஏப்ரல் 10ம் நாள் சென்னை மாகாண பிரதமராக வெற்றி பெற்று பதவி ஏற்றார். 1952ம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகள் அப்பதவியில் பிரதமராகவும், தமிழகத்தின் முதல் முதல்வராகவும் பல புதிய திட்டங்களை கொண்டு வந்து ஆட்சி செய்தார். 1952ல் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, ராஜாஜியை மாகாண முதல்வராக பதவியேற்கச் செய்தார். 1954ம் ஆண்டு முதல் 1956ம் ஆண்டு வரை ஒரிஸ்ஸா மாநில கவர்னராக அரும் பணியாற்றியவர். 1955ம் ஆண்டு காந்தி கலை மன்றம் ஒன்றை நிறுவி தனது அனைத்து சொத்துக்களையும் பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் எழுதி வைத்து விட்டு 1957ம் ஆண்டு மார்ச் 15ம் நாள் காலமானார்.

**பி.எல். துரைச்சாமி ராஜா :**

பி.எல்.துரைச்சாமி ராஜா நகரின் முனிசிபல் தலைவராக தொண்டாற்றியவர். பி.எஸ். குமாரசாமி ராஜாவின் ஆத்ம சிஷ்யராக உருவெடுத்து, சட்டமறுப்பு இயக்கப் போராட்டத்தின் போது, புரட்சிகரமான பேச்சுக்களையும், பிரிட்டிஷ் அரசின் நிர்வாக சீர்கேடுகளை கண்டனம் செய்து பேசிய காரணத்திற்காக 1932ம் ஆண்டு ஜனவரி மாதம் 6ம் நாள் கைது செய்யப் பட்டு இரண்டு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை பெற்று பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார். 1934ம் ஆண்டு விடுதலைப் பெற்றபின்னர் காந்தியடிகள் வாழ்ந்து வந்த வார்தா ஆசிரமத்திற்குச் சென்று காந்தியடைகளுடன் வாழ்ந்து 1941ம் ஆண்டு நகருக்குத் திரும்பினார். 1942ம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் நகரில் நடைபெற்ற போராட்டத்தில் பங்கு கொண்ட தலைவர். அதன் காரணமாக ஏற்பட்ட கலவரத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறை தண்டனை பெற்றார். 1947ம் ஆண்டு விடுதலைக்குப் பின் 1948ம் ஆண்டு நகரசபைத் தலைவரானார். ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் சிலையை அப்புறப்படுத்திவிட்டு அவ்விடத்தில் காந்தியடிகளின் மார்பளவு சிலை வைத்து காந்தி சிலை ரவுண்டானாவாக மாற்றினார்.

**எ.எஸ். கழுகுமலை ராஜா :**

1917ம் ஆண்டு பிறந்த கழுகுமலை ராஜா அரங்கசாமி ராஜாவின் உடன் சென்று கதர் இயக்கத்தின் உயிர் நாடியாக செயல்பட்டவர். கள்ளுக்கடை மறியல், அன்னியத்துணி பகிஷ்கரிப்பு, உப்பு சத்யாகிரகம் போன்ற போராட்டங்களில் கலந்து கொண்டு இரண்டு முறை சிறை சென்றவர். கதர் இயக்கம் தேசிய அளவில் சர்வோயதமாக மாறும் வரை நகர் கதர் போர்டு உதவியாளராகவும் இருந்து, 1928ம் ஆண்டு கல்கத்தா காங்கிரஸ் மற்றும் கதர் சங்க மாநாட்டில் ராஜபாளையம் கதருக்கு முதல் பரிசினை பெற்று தருவதில் வெற்றி கண்டவர்.

**எஸ்.கே. பங்காரு ராஜா :**

இ.பூ. அரங்கசாமி ராஜாவினை குருவாகக் கொண்டு

நிலையத்தில் பயின்றவர். 1916ம் ஆண்டு அரங்கசாமி ராஜாவால் தீவிர அரசியலுக்கு கொண்டு வரப்பட்டவர். 1916 முதல் 1924ம் ஆண்டுகள் இளைஞராக அனைத்து போராட்டங்களிலும் தீவிர பங்கெடுத்து தலைமைப் பொறுப்பினை பெற்றுக் கொண்டவர். 1919ம் ஆண்டு காந்தியடிகள் சாத்தூர் வருவது அறிந்து பார்வையாளர் ஒருவராக நின்று அவரை தரிசித்து அதே காந்தியடிகள் 1927ம் ஆண்டும் 1934 ம் ஆண்டும் நகருக்கு அழைத்து வந்து தனது வீட்டில் சிறப்பு விருந்தாளியாக உபசரித்தார். 1920-22ம் ஆண்டுகளில் ஒத்துழையாமை இயக்கத்திலும், 1921ம் ஆண்டு நகரில் விவசாயிகள் சங்கத்தினையும், 1922ம் ஆண்டு ஹரிஜன சங்கத்தையும் நிறுவி அதன் செயலாளராக பணியாற்றி அனைத்து கிராமங்களிலும் இவற்றின் கிளைகளை நேரில் சென்று ஏற்படுத்தியவர். சட்ட மறுப்பு இயக்கம் தீவிரமடைந்த போது, 1931ம் ஆண்டு நகரில் உள்ள பல கள்ளுக்கடைகளில் மறியல் செய்தவர். 1932ம் ஆண்டு காந்தியடிகள் கைது செய்யப்பட்டதை எதிர்த்து, நகர் காங்கிரஸ் கமிட்டிக்கு தடை போடப்பட்டிருந்தும் அவற்றையெல்லாம் மீறி கண்டன போராட்டம் நடத்தியதால் ஓராண்டு கடும் காவல் தண்டனை பெற்றார். 1934ம் ஆண்டு டெல்லி சட்டசபைக்கு மதுரை – ராமநாதபுரம் – திருநெல்வேலி சார்ந்த வேட்பாளராக களமிறங்கி வெற்றி பெற்று 1937 வரை பதவியில் அமர்ந்தவர். 1937ம் ஆண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியின் வேட்பாளராக நின்று போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டவர். 1938ம் டிசம்பரில் 40வது தமிழ் மாகாண காங்கிரஸ் மாநாட்டினை ராஜாஜி, காமராஜர், ஓ.பி. ராமசாமி செட்டியார், வி.வி. கிரி போன்றவர்களை அழைத்து வந்து வெற்றி பெறச்செய்தவர். 1934ம் ஆண்டு காந்தியடி களையும், 1935ம் ஆண்டு நேரு மற்றும் ராஜேந்திர பிரசாத் போன்ற தேசியத்தலைவர்களை நகருக்கு அழைத்து வந்து மக்களிடையே தேசியம் வளர்த்தவர். இரண்டாம் உலகப் போரின் காரணமாக அனைத்து காங்கிரஸ் சட்டமன்றங்களும் ராஜினாமா செய்தபோது தனது சட்டமன்ற உறுப்பினர் பதவியை துறந்தார். தொடர்ந்து தனிநபர் சத்தியாகிரகத்தில் பங்கெடுத்து பிரிட்டிஷ் அரசால் 9 மாதம் சிறை தண்டனை பெற்று திரும்பினார். 1942ம் ஆண்டு மாகாண காங்கிரஸ் முக்கிய தலைவர்கள் ஒருவராக பதவியேற்றார்.

1946ம் ஆண்டு டி.பிரகாசம் மந்திரிசபையில் விவசாயத்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சராக பதவியேற்று, 1947ம் ஆண்டில் தனது பதவியை ராஜினாமா செய்தார். 1949ம் ஆண்டு ஏப்ரல் 10ம் நாள் சென்னை மாகாண பிரதமராக வெற்றி பெற்று பதவி ஏற்றார். 1952ம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகள் அப்பதவியில் பிரதமராகவும், தமிழகத்தின் முதல் முதல்வராகவும் பல புதிய திட்டங்களை கொண்டு வந்து ஆட்சி செய்தார். 1952ல் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, ராஜாஜியை மாகாண முதல்வராக பதவியேற்கச் செய்தார். 1954ம் ஆண்டு முதல் 1956ம் ஆண்டு வரை ஒரிஸ்ஸா மாநில கவர்னராக அரும் பணியாற்றியவர். 1955ம் ஆண்டு காந்தி கலை மன்றம் ஒன்றை நிறுவி தனது அனைத்து சொத்துக்களையும் பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் எழுதி வைத்து விட்டு 1957ம் ஆண்டு மார்ச் 15ம் நாள் காலமானார்.

**பி.எல். துரைச்சாமி ராஜா :**

பி.எல்.துரைச்சாமி ராஜா நகரின் முனிசிபல் தலைவராக தொண்டாற்றியவர். பி.எஸ். குமாரசாமி ராஜாவின் ஆத்ம சிஷ்யராக உருவெடுத்து, சட்டமறுப்பு இயக்கப் போராட்டத்தின் போது, புரட்சிகரமான பேச்சுக்களையும், பிரிட்டிஷ் அரசின் நிர்வாக சீர்கேடுகளை கண்டனம் செய்து பேசிய காரணத்திற்காக 1932ம் ஆண்டு ஜனவரி மாதம் 6ம் நாள் கைது செய்யப் பட்டு இரண்டு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை பெற்று பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார். 1934ம் ஆண்டு விடுதலைப் பெற்றபின்னர் காந்தியடிகள் வாழ்ந்து வந்த வார்தா ஆசிரமத்திற்குச் சென்று காந்தியடைகளுடன் வாழ்ந்து 1941ம் ஆண்டு நகருக்குத் திரும்பினார். 1942ம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் நகரில் நடைபெற்ற போராட்டத்தில் பங்கு கொண்ட தலைவர். அதன் காரணமாக ஏற்பட்ட கலவரத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறை தண்டனை பெற்றார். 1947ம் ஆண்டு விடுதலைக்குப் பின் 1948ம் ஆண்டு நகரசபைத் தலைவரானார். ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் சிலையை அப்புறப்படுத்திவிட்டு அவ்விடத்தில் காந்தியடிகளின் மார்பளவு சிலை வைத்து காந்தி சிலை ரவுண்டானாவாக மாற்றினார்.

**எ.எஸ். கழுகுமலை ராஜா :**

1917ம் ஆண்டு பிறந்த கழுகுமலை ராஜா அரங்கசாமி ராஜாவின் உடன் சென்று கதர் இயக்கத்தின் உயிர் நாடியாக செயல்பட்டவர். கள்ளுக்கடை மறியல், அன்னியத்துணி பகிஷ்கரிப்பு, உப்பு சத்யாகிரகம் போன்ற போராட்டங்களில் கலந்து கொண்டு இரண்டு முறை சிறை சென்றவர். கதர் இயக்கம் தேசிய அளவில் சர்வோயதமாக மாறும் வரை நகர் கதர் போர்டு உதவியாளராகவும் இருந்து, 1928ம் ஆண்டு கல்கத்தா காங்கிரஸ் மற்றும் கதர் சங்க மாநாட்டில் ராஜபாளையம் கதருக்கு முதல் பரிசினை பெற்று தருவதில் வெற்றி கண்டவர்.

**எஸ்.கே. பங்காரு ராஜா :**

இ.பூ. அரங்கசாமி ராஜாவினை குருவாகக் கொண்டு

உப்பு சத்யாகிரக போராட்டத்திற்கு நகரிலிருந்து சென்ற ஆறு நபர்களில் இவரும் ஒருவர். இவரது சகோதரி கே.எம்.மஞ்சம்மாள், ராமநாதபுரம் மாவட்டத்தின் முதல் பெண் தியாகியாக ஆறுமாதம் சிறை தண்டனையும், வெளியே வந்த பின்னர் மீண்டும் பி.எஸ். மஞ்சம்மாளுடன் இணைந்து மறுபடியும் மூன்று மாத சிறை தண்டனையும் பெற்றவர். பங்காரு ராஜாவின் சகோதரியின் கணவர் கே.எல்.எம். ஆறு மாதம் சிறை சென்றவர். காங்கிரஸ் சர்வாதிகாரிகளில் ஒருவராக திகழ்ந்து சிறைதண்டனை முடியும் முன்னர் சிறையில் இறந்தவர்.

**ர்.எஸ். வஸந்தன் :**

தென்னிந்திய சுதந்திரப் போராட்டத்தில் குறிப்பாக ஆகஸ்ட் புரட்சியின் போது அக்னி பிழம்பாய் உருவெடுத்து பிரிட்டிஷ் போலீஸ்க்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவர். நகரில் தேசியக் கொடி போராட்டம் நடைபெற்ற போது எட்டு வயது சிறுவனாக கோமணம் கட்டிய காந்தியாக பங்கெடுத்துக்கொண்டு, சஞ்சீவி மலை, ராமர்கல்லின் உச்சி மீது கொடியேற்றிய போது உடன் சென்று பங்கெடுத்துக் கொண்டவர். 1942ம் ஆண்டு ஆகஸ்ட் புரட்சியில் பிரிட்டிஷ் எதிர்ப்பு நாசவேலையில் ஈடுபட்டு, பல நாட்கள் தேடப்பட்டு, பிடிபட்டதும் 60க்கும் மேற்பட்ட போலீஸாரது பூட்ஸ் கால்களால் உதைபட்டு, தரையில் உருட்டப்பட்டு, மனிதாபிமான முறையில்லாமல் பல வழிகளில் போலீஸாரால் தொடர்ந்து 20 நாட்கள் போலீஸ் ரிமாண்டில் வைத்து துன்புறுத்தப்பட்டவர். ஏறக்குறைய அரை கிலோ மீட்டர் வரை பாதாள சாக்கடை வழியாக உள்ளே வந்து போலீஸ் நிலையத்தின் உள்ளே இரவில் நுழைந்து வெடிகுண்டு வைத்து விட்டு , போலீஸ் நிலையத்தை சுக்கு நூறாக்கியவர். எஸ்.ஆர். தனுஸ்கோடி ராஜா, குருசாமி செட்டியார், டி.பி. செல்வம், அக்னிவேல் முதலியார், பிரீபாரஸ் சுப்பராஜா, திருப்பூர் சுந்தரம் போன்றோர்களுடன் இணைந்து வெள்ளையனே வெளியேறு போராட்டம் நடத்தியமைக்காக இரண்டாண்டுகள் சிறைத்தண்டனை பெற்று அவதிக் குள்ளானவர்.

மேலும் பிள்ளையார்சாமி தேவர், கே.எம்.சங்கராஜா, பி.என்.சுப்பராஜா, பி.கே.குப்புசாமி ராஜா, சுந்தரம் பிள்ளை, தேசிங்குராஜா, அப்பாள் ராஜா, எம்.கே.ராமசாமி ராஜா, ஏ.கே.டி.பலராம ராஜா,கே.கே. அர்ஜுன ராஜா, கே.ஆர்.சுப்பராஜா, கே.எஸ். பட்டாபிராம ராஜா, பி.எல். வேலாயுத ராஜா, கே. பாப்பு ராஜா, வெண்கலக்குரல் ராமசாமி தேவர், டி.பி.கந்தசாமி ராஜா என நகரின் நூற்றுக்கணக்கான தேசாபிமானிகள் சுதந்திரப் போரில் தங்களது சொத்துக்களை ஜப்தி கொடுத்தும், பல ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றும் பிரிட்டிஷ் அரசினை தங்களது உயிர் மூச்சு உள்ளவரை எதிர்த்து ராஜபாளையத்தின் பெருமையினை உலகறியச் செய்தனர். 1942ம் ஆண்டு நகரில் நடந்த ஆகஸ்ட் புரட்சியைப் பற்றி ஜப்பான் ரேடியோ போலீஸ் அட்டகாசம் குறித்து ஒலிபரப்பியது. இன்றைய சுதந்திரப் பொன்னாளில் இத்தேசபக்தர்களை நினைவு கூறுவது நமது கடமையாகும்.

## வாழ்க்கை !

* வாழ்க்கை ஒரு சவால் – அதனை சந்தியுங்கள்
* வாழ்க்கை ஒரு பரிசு – அதனை ஏற்றுக்கொள்ளுங்கள்
* வாழ்க்கை ஒரு சாகச பயணம் – அதனை மேற்கொள்ளுங்கள்
* வாழ்க்கை ஒரு சோகம் – அதனை கடந்து வாருங்கள்
* வாழ்க்கை ஒரு துயரம் – அதனை தாங்கிக் கொள்ளுங்கள்
* வாழ்க்கை ஒரு கடமை – அதனை நிறைவேற்றுங்கள்
* வாழ்க்கை ஒரு விளையாட்டு – அதனை விளையாடுங்கள்
* வாழ்க்கை ஒரு விநோதம்– அதனை கண்டறியுங்கள்
* வாழ்க்கை ஒரு பாடல் – அதனை பாடுங்கள்
* வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் – அதனை பயன்படுத்திக் கொள்ளுங்கள்
* வாழ்க்கை ஒரு உறுதிமொழி – அதனை நிறைவேற்றுங்கள்
* வாழ்க்கை ஒரு காதல் – அதனை அனுபவியுங்கள்
* வாழ்க்கை ஒரு அழகு – அதனை ஆராதியுங்கள்
* வாழ்க்கை ஒரு போராட்டம் – அதனை எதிர் கொள்ளுங்கள்
* வாழ்க்கை ஒரு குழப்பம் – அதற்கு விடை காணுங்கள்
* வாழ்க்கை ஒரு இலக்கு – அதனை எட்டிப்பிடியுங்கள்

- S. Ganesan, III B.Com., (R)

## விடுதலை வேள்வியில் காந்தியடிகள் !

– அ. அகஸ்டின் அன்புராஜ், II B.Sc., (C)

இந்தியத் தாய் ஞானப்பாலை
இனிதே சுவைத்தவராம் !
துன்பச் சிறைவாசப் பாயில்
துயின்று எழுந்தவராம் !
வெண்மைக் கதராடை அணிந்த
வெளுத்தமனப் புனிதராம் !
எதிரியையும் நண்பர் ஆக்கிடும்
இனிய குணத்தவராம் !
கடமை வீரராம் அண்ணல் காந்தியடிகள் ! ஆம்!
எங்கள் மகாத்மா காந்தியடிகள் !
இந்தியன் என்ற உணர்வோடு
இறுமாப் பெய்தி வாழ்ந்தவராம் !
அந்நியர் வந்தால் அவர் தோல்வி
அடைந்திட ஒன்றாய்ப் போரிட்டவராம் !
செந்நிற உழைப்பால் நம்நாட்டுச்
சுதந்திரம் பெற்றுத் தந்தவராம் !

## விடுதலை வேள்வியில் திருப்பூர் குமரன் !

– அ. அகஸ்டின் அன்புராஜ், II B.Sc., (C)

❖ கொடியினை ஏந்தி நின்றார் – நாம்
கொத்தடிமை இல்லையென்றார்
பூ மாதா முகம் காண மட்டுமே
தலையினைக் குனிந்திருந்தார் !
கொடியையே உயர்த்தி நின்றார் !
கொள்கையில் உயர்ந்து நின்றார் !
மூடர்கள் மூளையைத் தாக்கவே
மடை திறந்த வெள்ளமாய்
மழையெனக் கொட்டியது கருதி
கண்களை இமை மூட கால்களும் தள்ளாட
தேகம் தளர்ந்தது ! மண்மடி சாய்ந்தார் !

❖ மூவண்ணக் கொடி சாயவில்லை
திருப்பூர் மண் முழுவதும் குருதி வாசம் !
கொள்கைக்கே உயிர்நீத்த உத்தமன் ...
கொடிகாத்து புகழ் சேர்த்த குமரன்
குன்றாது அவர் தந்த தியாகம்
எந்நாளும் நீங்காமல் காப்போம் !

## MONEY $

- It can buy a House
  But not a Home.
- It can buy a Bed
  But not Sleep.
- It can buy a Clock
  But not Time.
- It can buy you a Book
  But not knowledge.
- It can buy you Medicine
  But not Health.
- It can buy you Blood
  But not Life.
- It can buy you Sex
  But not Love.
- So you see Money
  Isn't everything
  I tell you all this because
  I am your Friend,
  and as your Friend I
  want to take away your
  pain and suffering ...
- So send me all your money
  and I will suffer for you.
- A truer Friend hon me
  will never find.
- CASH ONLY PLEASE !!

- S.A. Ramasubramaniam, II B.Sc., (C.S.)

# YOUTH RED CROSS



DISTRICT LEVEL STUDY CAMP PARADE



DISTRICT LEVEL STUDY CAMP INAUGURATION




YRC AIDS AWARENESS PROGRAMME



WILD-LIFE PHOTO EXHIBITION




BLOOD DONATION CAMP




ANTI-PLASTIC CAMPAIGN

# நாட்டு விடுதலையில் நாடகப் பாடல்கள்

– Dr. D. வெங்கடேஸ்வரன், M.A., M.Phil., விரிவுரையாளர், வரலாற்றுத்துறை.

பாரத நாடு பரங்கியர் கையில் பரிதவித்தபோது அவர்களிடமிருந்து விடுதலை பெறப் பலரும் பாடுபட்டனர். தேசிய விடுதலைப் போரில் மக்கள் உணர்ச்சியைத் தட்டி எழுப்புவதில் நாடகக் கலைஞர்கள் முக்கியப் பங்காற்றினர். அன்றைய காலத்தில் பெரும்பாலான மக்கள் கல்வி அறிவைப் பெற்றிருக்கவில்லை. கல்வியறிவற்ற பாமரர் களிடையே பத்திரிக்கைச் செய்திகளும் தேசிய கட்டுரைகளும் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்த வில்லை. இவர்களிடையே தேசிய உணர்வைப் பரப்புவதில் நாடகப் பாடல்கள் முக்கியப் பங்காற்றின.

நாடகப் பாடலாசிரியர்கள் தேசியப் பாடல்களை எழுதுவதில் அதிக ஆர்வம் காட்டினர். காந்தியக் கொள்கைகள், ஜாலியன் வாலாபாக் படுகொலை, ஒத்துழையாமை இயக்கம் போன்றவைகள் நாடகப் பாடல்களுக்குக் கருவாக அமைந்தன. மேலும் மோதிலால் நேரு, காந்திஜி, ஜவஹர்லால் நேரு, பகவத் சிங், ராஜகுரு, சுகதேவ் போன்ற தியாகச் சீலர்களைப் பற்றியும் பல பாடல்கள் எழுதி நாடகத்தினிடையே பாடப்பட்டன. மதுரகவி பாஸ்கரதாஸ், ஓரடிமுத்து வீரப்ப பிள்ளை, பூமி பாலகதாஸ், சந்தான கிருஷ்ண நாயுடு, எசக்கி முத்து வாத்தியார் போன்ற பாடலாசிரியர்கள் தங்கள் தேசியப் பாடல்கள் மூலம் மக்கள் மத்தியில் பிரபலமடைந்தார்கள். இவை தவிர மகாகவி பாரதியாரின் தேசியப் பாடல்களும் நாடகங்களில் பொருத்தமாகச் சேர்க்கப்பட்டன.

அப்போதைய நாடக நடிகர்கள் முறைப்படி இசைப் பயிற்சி பெற்றுச் சிறந்த பாடகர்களாகத் திகழ்ந்தனர். அவர்கள் தேசியப் பாடல்களை மிகுந்த உணர்ச்சியுடன் பாடி மக்களிடையே புது உத்வேகத்தை ஏற்படுத்தினர். எஸ்.எஸ். விஸ்வநாததாஸ், கே.பி.சுந்தராம்பாள், எஸ்.வி. சுப்பையா பாகவதர், கே.எஸ். அனந்த நாராயண ஐயர், டி.எம். காதர் பாட்சா, எம்.எஸ். ராஜம், கே.பி. ஜானகி அம்மாள், எம்.எம்.சிதம்பரநாதன், எஸ்.வி. வாசுதேவ நாயர், எம்.எஸ்.விஜயாள், எம்.ஆர். கமலவேணி ஆகிய நாடகக் கலைஞர்கள் தேசியப் பாடல்கள் மூலம் பிரபலமடைந்தனர்.

நாடகங்கள் பெரும்பாலும் புராண மற்றும் வரலாற்றுக் கதைகளைக் கருவாகக் கொண்டிருந்தன. இக்கதைகளின் கதாபாத்திரங்கள் தேசியப் பாடல்களைப் பாடி மக்களது தேசிய உணர்வைத் தட்டி எழுப்பினர். "வள்ளி திருமணம்" நாடகத்தில் வள்ளி தினைப்புனத்தில் பறவைகளை விரட்டும் போது,

"இந்தியாவைக் கொள்ளை கொள்ளும்
இங்கிலாந்து பட்சிகளா
சொந்த நாட்டுக்கோடுங்கள்
ஆலோலங்கடி ........"

என்று பாடி ஆங்கிலேயரை விரட்ட மக்களைத் தூண்டுவார். "கோவலன்" நாடகத்தில் மாதவியைப் பற்றிக் கோவலன் பாடும்போது,

'காசைப் பறிக்கும் ஐரோப்பா
கவர்மெண்டைப்போல
கைப்பொருள்தனைப் பறித்தாள்'

என்று பாடினார். இவ்வாறு நாடகாசிரியர்கள் கதையோடு தொடர்பில்லாத தேசியப் பாடல்களைத் தங்கள் நாடகங்களில் இடம்பெறச் செய்து தங்கள் நாட்டுப்பற்றை வெளிக்காட்டினார்கள்.

டி.பி. கிருஷ்ணசாமி பாவலரின் "கதரின் வெற்றி" எனும் நாடகத்தில்,

"சீரான இந்தியாவில் பேர் போன
தொழில் களெல்லாம்
செத்துக் கிடக்கும் இந்த
சீர்குலைந்த நாளையிலே
சேர்ந்த நாட்டின் பெருமை
செப்புவேன் கேளருமை
தீருமே நம் வறுமை"

என்ற பாடலைப் பாடிய போது அரங்கத்தில் எழுந்த ஆரவாரம் அடங்க பல நிமிடங்களாகும். சாமிநாத சர்மாவின் "தேசபக்தி" நாடகத்தில்,

'தேச பக்தியே முக்தியாம்
தெய்வ சக்தியாம்
நேசரே நாட்டுக்காக
நிமிர்ந்துயிரைக் கொடுப்பீர்'

என்ற மதுரை கவி பாஸ்கரதாஸின் பாடல் மூலம் மக்களைத் தேச விடுதலைக்காகத் தியாகம் செய்யத் தூண்டியது. மேலும் இந்நாடகத்தினிடையே கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் "காந்தி மகான் கதை" எனும் வில்லுப்பாட்டைப் பாடியதை மக்கள் ஆரவாரமாக ரசித்தனர். எஸ்.வி. சகஸ்ரநாமம் பாரதியாரின் "அச்சமில்லை அச்சமில்லை", "விடுதலை விடுதலை" போன்ற பாடல்களை "நாம் இருவர்" நாடகத்தில் இடம் பெறச்செய்தார்.

மதுரகவி பாஸ்கரதாஸின் "கொக்கு பாட்டு" போன்ற தேசியப்பாடல்களைப் பாடி எஸ்.எஸ். விஸ்வநாததாஸ் தேசிய உணர்வை எழுப்பினார். இந்தப் பாடல்களில்

ஆங்கிலேயர்களைக் கொக்காக உருவகப்படுத்திப் பாடப்பட்டது.

"கொக்குப் பறக்குதடி பாப்பா – அதன்
குறிப்பை உணர்ந்து கொள்வாய் பாப்பா – உன்னை
கொக்கென்றால் கொக்கு – நம்மைக்
கொல்ல வந்த கொக்கு ...
..............................
பஞ்சாபில் படுகொலை செய்த கொக்கு – அது.
பழிபாபம் பார்க்காத கொக்கு
அஞ்சாமல் பாஸ்கரன் தமிழ்பாடி அதை
அடித்து விரட்ட வேண்டும் பாப்பா"

இப்பாடலை மக்கள் மிகுந்த ஆரவாரத்துடன் ரசித்தனர்.

காந்திஜி வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ள லண்டன் சென்ற போது கே.பி. சுந்தரம்மாள் நாடக மேடைகளில்,

"காந்தி லண்டன் சேர்ந்தார் கைகூப்பித்
தொழுவீர் கைகூப்பித் தொழுவீர்
தொழுவீர் – தொழுவீர்
சாந்தி யில்லாது பேசும் சர்ச்சில் இனத்தவரே
ஆழ்ந்து நன்றாக யோசிப்பீர் !"

என்று பாடி காந்திஜியின் பெருமைகளை பாமர மக்களுக்கு எடுத்துக் கூறினார்.

இவ்வாறு நாடகப் பாடல்கள் பாமர மக்களிடையே தேசிய உணர்வைப் பரப்பின. மக்களும் இத்தகைய பாடல்களை மிகவும் ஆரவாரத்துடன் ரசித்தனர். நாடகக் கலைஞர்களை மீண்டும் மீண்டும் தேசியப் பாடல்களைப் பாடும் படி வேண்டினர். பல நாடகக் கலைஞர்கள் தேசியப் பாடலைப் பாடியதற்காகக் காவல் துறையால் கைது செய்யப்பட்டனர். எஸ்.எஸ். விஸ்வநாததாஸ் தேசியப் பாடலை பாடியதற்காகப் பல முறை சிறை சென்றார். இவ்வாறு நாடகக் கலைஞர்கள் தங்களது தேசியப் பாடல்கள் மூலம் தேசிய உணர்வை வளர்ப்பதில் வெற்றி பெற்றனர்.

பாமரனையும் படிப்பறிவில்லாதவனையும் எளிதில் தட்டியெழுப்பும் வல்லமை மிக்கவை பாடல்கள். அவற்றைத் தேசிய உணர்வுடன் நடிகர்களும் பாடகர்களும் பாடி மக்கள் மத்தியில் தேசிய உணர்வைத் தட்டியெழுப்பினர். தமிழர்களின் நாடி நரம்புகளைச் சூடாக்கிய முண்டாசுக் கவிஞன் பாரதியின் பாடல்கள் இன்னும் கூடத்தேசிய உணர்வை ஊட்டும் வண்ணம் அமைந்துள்ளன.

***

## ஆரம்பப்பள்ளி !

⁜ கல்விப்
பயணத்தின்
முதல்
ஸ்டாப் !

## நகைச்சுவை வினாடி வினா !

⁜ பெண்களுக்கு இந்த காரம் பிடிக்கும் ? அது எந்தக் காரம் ? – அலங்"காரம்".

⁜ இந்தப்பை தூக்கி எறியப்பட வேண்டும் இது எந்தப்பை ? – குப்"பை".

⁜ யாவரும் விரும்பாத மாலை எது ?
– மஞ்சள் கா"மாலை".

⁜ அடம் பிடிக்கிற ஊர் எது ? – "சண்டி"கார்.

⁜ எந்த பையில் சாமான்கள் போட முடியாது ?
– "தொப்பை"யில்.

⁜ ஓடாத மான் எது ? – "அந்தமான்".

⁜ சட்டம் படித்த கிளு கிளு ஊர் எது ? – சிம்"லா".

⁜ இன்ஷியல் உடைய நாய் எது? – "ஓ" நாய்.

⁜ பெண்களுக்கு எந்தச் சுவை பிடிக்கும் ?
– "நகை"ச்சுவை

## கடிஸ் !

⁜ மகிழ்ச்சியான நாடு எது ? – "சிரி"யா.

⁜ அவசரமான நாடு எது ? – "அர்ஜென்ட்"டினா.

⁜ செய்தியுள்ள நாடு எது ? – "நியுஸ்"லாந்து.

⁜ சண்டை போடும் நாடு எது ? – "போர்"ச்சுக்கல்.

⁜ சென்டிமென்டான நாடு எது ? – இத்"தாலி".

⁜ வரிசையான நாடு எது ? – "கியூ"பா.

⁜ சொத்துள்ள நாடு எது ? – "ஆஸ்தி"ரேலியா.

⁜ குடிசைகள் இல்லாத நாடு எது ? – "பங்களா"தேஷ்.

⁜ சோம்பேறியான நாடு எது ? – ம"லேசி"யா.

⁜ நெரிசலான நாடு எது ? – "ரஷ்"யா.

– L. Marimuthu, III B.Sc., (C)

# சமூக நலத்தொண்டில் மாணவரின் பங்கு

- முனைவர் பேரா. க. அழகர், தமிழ் விரிவுரையாளர்.

**முன்னுரை :**

ஒவ்வொருவரும் பிறருக்காக வாழ்வதுதான் சமுதாயத்தொண்டுக்கான அடிப்படையாகும். இன்றைய அரும்புகளே நாளைய மலர்கள் என்பது போல இன்றைய மாணவர்களே நாளையத் தலைவர்கள். வளரும் மாணவர்கள் சுயநலவாதிகளாக இல்லாமல் பொது நலவாதிகளாகவும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உடையவர்களாகவும், பொறுப்புக்களை ஏற்று நடத்தும் திறம் வாய்ந்தவர்களாகவும் சமுதாயத்திற்கு உதவும் பண்புடையவர்களாகவும் விளங்க வேண்டும். மாணவர்கள் மனம் வைத்தால் கல்லும் புல்லாகும். புல்லும் நெல்லாகும். படிக்கும் போதே முடிந்தவரை பொதுத்தொண்டு செய்வது இன்றைய மாணவர்களின் கடமையாகும். அதைப்பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**மாணவர் கடமைகள் :**

மாண்பு உடையவர்கள் மாணவர்கள். மாணவப் பருவம் என்பது மாசு மறுவற்ற எதையும் சாதிக்க வேண்டும் என்ற துடிப்புமிக்க பருவமாகும். அப்பருவத்தில் மாணவர்கள் தம் சிந்தை, சொல், செயல் ஆகியவற்றில் தூய்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். முதலில் மாணவர்கள் கற்க வேண்டுவனவற்றை எல்லாம் பழுதறக்கற்று, பின்பு தான் கற்றதற்குத் தக ஒழுக வேண்டும். இதையே வான்புகழ் வள்ளுவர்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதக்குத் தக"

என்கிறார். கல்வியானது மனித சமூகத்தை மேம்படுத்தும் கருவியாக விளங்குதல் வேண்டும். நல்ல எண்ணம், நல்ல நடத்தை, உண்மையைக் கடைபிடித்தல் இவையே கல்வியின் தலையாய பயன்களாகும்.

"ஒரு வருடப் பலனுக்கு நெல்லை நடுங்கள்,
முப்பது வருடப் பலனுக்கு மரங்களை நடுங்கள்,
நூறாண்டுப் பலனுக்குக் கல்வியை நடுங்கள்"

என்கிறது சீனப்பழமொழி.

ஒழுக்கத்தை உயிரைக் காட்டிலும் மேலாக மதிப்பது இன்றைய மாணவர்களின் கடமையாகும். கல்வி கண் போன்றது. ஒழுக்கம் உயிரைப் போன்றது. ஒருவன் கண் இல்லாமல் வாழலாம். ஆனால் உயிர் இல்லாமல் வாழ முடியாது. இதையே வள்ளுவர்,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" என்றார்.

முத்தும், மணியும், பொன்னும் கொண்டு செய்யப்பட்ட ஓர் அணிகலன் இடையே கெட்டால், அதனைத் திருத்திச் செப்பனிட்டு முன்போல ஆக்கிக் கொள்ள முடியும். ஆனால் சான்றாண்மை, பெருமை, ஒழுக்கம் முதலான மக்கட்பண்புகள் இடையே கெட்டால் அவற்றைச் சீர் செய்து மீண்டும் பெறுதல் என்பது இயலாது. இதையே குறிஞ்சிப்பாட்டு தெரிவிப்பது.

"முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வருங்குறைய கலன்கெடின் புணரும்
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசறக் கழிஇ வயங்கு புகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய என்னாற் தொன் மருங்கு அறிஞர்"

**நாட்டுப்பற்று :**

நாம் பிறந்த நாடு, உமது உடலை விட உயிரை விட உயர்வானது என்ற எண்ணம் மாணவர்களின் நெஞ்சில் எப்போதும் நீங்காமல் இருக்க வேண்டும். தேனைப் பிரியாமல் இருக்கும் சுவையைப் போல, வானைப் பிரியாமல் இருக்கும் நிலவைப் போல, மலரைப் பிரியாமல் இருக்கும் மணத்தைப் போல நாட்டுப் பற்றானது மாணவர்களின் உள்ளத்தை விட்டு நீங்கக் கூடாது. இதையே மகாகவி பாரதியார்,

"நாமிருக்கும் நாடு நமதென் பறிந்தோம்
நமக்கே உடைமையாம் என்பதறிந்தோம்"

என்கிறார்.

**மாணவர் தொண்டுகள் :**

கூடிவாழும் மக்கட் கூட்டமே சமுதாயம் ஆகும். சமுதாயத்தின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதுடன் அதன் மேம்பாட்டுக்காகத் தொண்டு செய்வது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும். நமது சமுதாயம் கல்வியின்மை, அறியாமை, மூடப்பழக்கம், சாதி வேறுபாடுகள், சமய வேறுபாடுகள், பெண்ணடிமை, தீண்டாமை, வேலைவாய்ப்பு இன்மை போன்றவைகளால் சீரழிந்து கிடக்கின்றன. மாணவர்கள் இச்சமுதாய முன்னேற்றம் காண, நாட்டு நலப்பணி இயக்கம், செஞ்சிலுவைச் சங்கம், சாரணர் இயக்கம், தேசிய மாணவர் படை போன்ற அமைப்புகளில் சேர்ந்து பல

தொண்டுகளைச் செய்ய வேண்டும் என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற அப்பரின் கூற்றுக்கிணங்க, புயல் சேதங்கள், பூகம்பம், வெள்ளப்பெருக்கு, தீ விபத்து போன்ற இயற்கைச் சீர்கேடுகள் எழும்போது மாணவர்கள் உதவலாம். சாலைத் துப்புரவுப்பணி செய்யலாம். போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க உதவலாம். கல்வி அறிவில்லாத கிராமத்து மக்களுக்குக் கல்வி புகட்டலாம். விபத்தில் காயமடைந்து துடிப்போர்க்கு முதலுதவி செய்யலாம். ஊனமுற்றோர்க்கு உதவலாம். கொடிய நோய்களான மஞ்சட் காமாலை, மலேரியா, எலும்புரிக்கி நோய், அம்மை, மூளைக் காய்ச்சல், காலரா, எயிட்ஸ், போலியோ போன்ற கொடிய நோய்கள் வராமல் முன் கூட்டியே தடுப்பதற்கு மக்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் குறித்து பிரச்சாரம் செய்யலாம். குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப பெற்றோர்க்கு உதவலாம். தெருக்களைத் தூய்மை செய்யலாம். வேளாண்மைத் துறையில் ஏற்பட்டுள்ள அறிவியல் முன்னேற்றம் குறித்து உழவர் பெருமக்களுக்கு விளக்கலாம். ஆயிரக்கணக்கான மரங்களை நட்டுப் பாதுகாக்கலாம். சுற்றுப்புறம் மற்றும் வகுப்பறையைத் தூய்மையாக வைத்துக் கொள்ள உதவலாம். கண்ட இடங்களில் காகிதங்களைக் கிழித்துப் போடாமல், வகுப்பறையில் ஒரு அட்டைப் பெட்டி வைத்து அதில் போடலாம். கண்ட இடங்களில் சிறுநீர் கழிக்காமல் உரிய இடத்தைப் பயன்படுத்தலாம். பொதுப் பொருளுக்குத் தீங்கு இழைக்காமல் தடுக்கலாம். மக்களிடையே அன்பையும், பண்பையும் வளர்க்கலாம்.

**முடிவுரை :**

இந்த நாட்டின் ஒளிமயமான வரும் காலம் இன்றைய மாணவர்களின் கைகளில் தான் இருக்கிறது. நான் பிறந்த இந்த நாட்டின் நலனுக்காக உரிய காலத்தில் என் உயிரையும் கொடுப்பேன் என்ற உணர்வோடு மாணவர்கள் படித்து வெளியேற வேண்டும்.

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்"

என்ற வள்ளுவரின் கூற்றுக்கிணங்க மாணவர்கள் எப்பொழுதும் தொண்டுகளைச் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

அறிவாகிய கரைகளை எழுப்பி அன்பாகிய நீரைப் பாய்ச்சி, சமுதாய முன்னேற்றம் என்ற பயிரை வளர்க்க வேண்டும்.


வாழ்க மாணவர் தொண்டு !

★ ★ ★

## மனித நேயம் !

மன்னித்து விடுங்கள்
இல்லாத ஒன்றை எழுதச் சொன்னால்
எப்படி எழுதுவது ...
வெட்டுக்குத்து என்றால்
விறுவிறுப்பாக எழுதலாம் !
களவு, கற்பழிப்பு என்றால்
கதை கதையாக எழுதலாம் !
மன்னித்து விடுங்கள்
மறுபடியும் எழுதச் சொல்லாதீர்கள் ...
தெய்வங்களைக் கல்லாக்கி
தேவைப்பட்டால் உடைத்து விட்டு
தெருக்களை உதிரமாக்கும்
தெம்பில்லாதவரை பார்த்த பிறகுமா !
மனித நேயத்தைப் பற்றி எழுதச் சொன்னீர் !
மருத்துவமனைக்குச் சென்றால்
பாமர மக்களின் கிட்னிகளை களவாடும்
கேவலமான டாக்டரைப் பார்த்த பிறகுமா !
இல்லாத ஒன்றை எப்படி எழுதுவது
மலரே இல்லாத போது
மனத்தை நேசிப்பது எப்படி ?
மனிதனே இல்லாத போது
நேயத்தை நேசிப்பது எப்படி ?
இல்லாத ஒன்றை
என்னை எழுதச் சொன்னால்
எப்படி எழுதுவது !
மறுபடியும் மனிதநேயம் பற்றி
எழுதச் சொல்லாதீர் !

– முருகன். பி (எ) ஸ்டாலின்,
பி.எஸ்.சி. கணிதம், இரண்டாம் ஆண்டு




We are glad that our Department of History has added yet another feather on its cap by bringing out the Quest Historica, a research journal of History. It is biannual to come out every April and October. The Principal is the patron of the journal. The Board of Editors is as follows: Editor : Dr. P. Gomathinayagam, Associate Editors : Dr. A. Subramanian and Mr. S. Ravichandran, Sub editors : Dr. P. Chandrasekaran, Mr. J. Dharmaraj, Dr. G. Radhakrishnan, Dr. P.S. Chandraprabhu, Dr. V. Venkatraman, Mr. D. Venkateswaran and Mr. K. Rameshkumar.

The first issue of the journal carries and editorial and nine articles on different topics. The editorial on the burning communal issue in India is a timely theme taken by the editor and handled in a nice way. Dr. V. Balambal, Professor of University of Madras has written an article the religious philosophy of the Cholas. Dr. B.S. Chandrababu of Madurai Kamaraj University has written an article on the Panchami lands of the Scheduled Castes and Tribes. There are three more articles by scholars outside the college. The members of the editorial board themselves have contributed four articles. All the based on interesting themes. They are nicely written in a lucid language. The articles are based on different periods in History namely the ancient, and the modern. The aspects of the themes are also different such as political, economic, religious and cultural. They are highly informative.

The execution of the printing work is also appreciable. The wrapper has been designed and printed in four colours giving prominence to the emblem of the college. The efforts of the Department of History are highly commendable. The publiction of this journal marks one more step of the department and the college towards the achievement of new laurels. We wish the department to achieve better in the coming month and years.

- Editor

# COMPUTER SCIENCE



Guest Lecture by Mr. R.S. Rajesh, M.S. University



Quiz Competition



Best Performance Award to SFR College

# CHEMISTRY



Industrial Visit

# TEXTILES



Seminar on Quality Management in Textile Industries



Textile Exhibition

# MATHS



Maths Exhibition




SFR Maths Exhibition Our Students Participate

## ENGLISH




Shri Krish Conducting Spoken English Class

## N.S.S.




Blood Grouping

## UNIVERSITY RANK HOLDERS



L to R : 1. R. Senthil Kumar - 11th Rank B.Com.,
2. V.C. Venkatraman - 15th Rank B.Com.,
3. R. Raja - IInd Rank B.A., (Hist)

## ROTRACT CLUB




Rotary Club President Addresses

# வானமே எல்லை !

- க. பொன்ராஜ், பி.எ., இரண்டாம் ஆண்டு.

(மதுரை எம்.எஸ்.வக்ப் கல்லூரியில் மதுரை காமராஜ் பல்கலைகழக இளைஞர் விழாவில் முதற்பரிசு பெற்ற கதை)

மினி பஸ்ஸிலிருந்து இறங்கிய என்னை எதிரே இருந்த டீக்கடையும், விவேகானந்தர் படிப்பகமும் வரவேற்றன. சிறுவர்கள் கிரிக்கெட் எதுவும் விளையாடாமல் படிப்பகத்தில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தது ஆச்சர்யமாயிருந்தது.

என்னிடம் சொன்னது போலவே குமரன் டீக்கடையில் உட்கார்ந்து இருந்தான். என்னைக் கண்டதும் எழுந்து வந்தான்.

"கரெக்டான சொன்ன டயத்துக்கு வந்துட்டியே!" என்றான்.

"ரிப்போர்ட்டர்ல..." என்று காலரைத் தூக்கி விட்டுக் கொண்டேன்.

"சரி.... சரி ..." என்றவன் "இது தான் நான் சொன்ன கிராமம்" என்றான்.

அப்பொழுது தான் என்னைச் சுற்றியிருந்த பகுதிகளை நோட்டம் விட்டேன். பேருந்து வந்து செல்லும் சாலைகள் குண்டும், குழியுமாக இல்லாமல் இருந்தது. தெருக்களில் சிறு காகிதத்தை கூட காண முடியவில்லை. ஒவ்வொரு வீட்டின் முன்பும் ஒரு சிறு குப்பைத் தொட்டி இருந்தது. தெருவெங்கும் வளரத்துடிக்கும் மரக்கன்றுகள். இது கிராமம் தானா?!

குமரன் என் கல்லூரி கால சிநேகிதன். சமீபத்தில் நாங்கள் சந்தித்துக் கொண்ட போது,

"உங்க பத்திரிக்கையிலே எதை எதையோ எழுதறீங்களே ... எங்க சித்தப்பாவோட ஊரே விநோதமா இருக்கு... அதையெல்லாம் எழுத மாட்டீங்களா..." என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டு, அப்படி என்னதான் விநோதம் இருக்கிறது என பார்ப்போமே என்று இதோ இந்த ஊரில் வந்து இறங்கி விட்டேன்.

குமரன் விவேகானந்தர் படிப்பகத்தில் படித்துக் கொண்டிருந்த பையன்களில் ஒருவனை அழைத்தான்.

"டேய் ... மனிதா ... இங்கே வா..."

என்னது பெயரே மனிதனா ?!

அந்த "மனிதன்" வந்தான். அவனிடம் குமரன், "உங்க அப்பா வீட்ல இருக்காரா?" என்றான்.

"இல்லண்ணே... அம்மா தான் இருக்காங்க..." என்று சொல்லி விட்டுப் போனான் "மனிதன்".

என்னை கூர்ந்து பார்த்த குமரன் "என்ன பேரே வித்தியாசமா இருக்குன்னு பார்க்கறியா.... இவங்க அப்பா பேரு என்ன தெரியுமா? கார்ல் மார்க்ஸ்! அவன் தான் இந்த ஊரோட தலைவிதியையே மாற்றியமைச்சவன்" அவன் சொல்ல, சொல்ல குறிப்பெடுத்துக் கொண்டேன். பேசிக் கொண்டே நடந்து அந்த வீட்டின் முன் வந்து நின்றோம்.

"குருவம்மா..." குமரன் குரல் கொடுத்தான்.

வீட்டிற்குள் இருந்து வெளியே தலையை நீட்டிய குருவம்மா... "என்னண்ணே... வாங்க உள்ள ..." என வரவேற்றாள்.

வீட்டிற்குள் போன பின்புதான் தெரிந்தது அவள் ஊனமென்று...!

"இவர் தான்.... நான் சொன்னவரு..." குமரன் என்னை அறிமுகப்படுத்த, அவள் வணங்கினாள். பதிலுக்கு நானும் வணங்கினேன். குமரன் சொல்ல ஆரம்பித்தான்.

"இது தான் கார்ல் மார்க்ஸோட மனைவி. தாழ்ந்த சாதியில் பிறந்து, ஊனமுற்ற, அடிப்படை கல்வியறிவு கூட இல்லாத இவங்கள உயர்ந்த சாதியில பிறந்து, முதுகலை பட்டம் பெற்ற கார்ல் மார்க்ஸ் கட்டிக்கிட்டான்.

இவங்க கல்யாணத்துல, இவங்க செஞ்ச முதல் காரியம் குடும்பக் கட்டுப்பாடு பண்ணிக்கிட்டதுதான். இன்னைக்கு மூன்று குழந்தைகளை தத்து எடுத்துருக்காங்க..." என்று சொல்லிக் கொண்டே போன குமரனை இடைமறித்தாள் அந்த பெண்மணி.

"மிச்சத்தை நானே சொல்றேண்ணே, நான் பதினைந்து தடவையும் அவர் 26 தடவையும் இரத்த தானம் செய்திருக்கோம். அவர் தன்னோட சொத்தையெல்லாம் அழிச்சி இன்னைக்கு இந்த கிராமத்துல எத்தனையோ கார்ல் மார்க்ஸ் – குருவம்மாக்களை உருவாக்கிட்டாரு. அவரோடு சிறுநீரகத்துல ஒன்னை ஏழை தாய் ஒருத்தருக்கு கொடுத்திருக்காரு! ஊர்க்காரங்ககிட்டே ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்தி எந்த விஷயத்துக்கும் அரசாங்கத்தோட கையை எதிர்பார்க்காம இருக்க வைச்சிட்டாரு...." அந்தப் பெண் சொல்லிக் கொண்டே போக நான் வாய் பிளந்தவாறு எழுதிக் கொண்டிருந்தேன்.

அடுத்ததாக குமரன் கார்ல் மார்க்ஸ் கட்டிய கோயிலை பார்க்க கூட்டிச் சென்றான். அந்தக் கோயிலில் யேசு சிலையும், மெக்கா படமும், சிவலிங்கமும் ஒரு சேர அமைந்திருந்தது. அங்கு வருகிறவர்கள் மூன்று தெய்வங்களையும் தொழுகிறார்கள். பிரார்த்திக்கிறார்கள். கும்பிடுகிறார்கள். பல குடும்பங்களை நேரில் பார்த்தேன். எல்லாமே "கலப்புக் குடும்பங்கள்". அடிப்படைக் கல்வி கூட கல்லாதவர்களின் வீட்டில் அடுக்கடுக்காய் புத்தகங்கள். ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஊரில் உள்ள அனைவரும் இரத்த தான முகாம் நடத்தி இரத்தம்

தருகிறார்களாம். கண் தானம் செய்வதற்கு அனைவரும் எழுதிக் கொடுத்து விட்டார்கள். குமரன் ஆதாரம் கொண்டு வந்து காட்டினான். சிகரெட் புகைக்க முயன்ற என்னை குமரன் தடுத்தான். மது, சிகரெட் எதுவுமே ஊரில் நுழைவதில்லையாம். ஊரில் திருமணம் என்றால் பெண்ணோ, ஆணோ யாரோ ஒருவர் ஆதரவற்றவராக, ஊனமுற்றவராக இருக்கிறார்கள். ஊர் திரும்புகையில் என் கண்களை கசக்கிப் பார்த்தேன். என்னை ஒரு முறை கிள்ளிப் பார்த்தேன். நான் கண்டவை எல்லாம் உண்மை தான். மதங்களை கடந்து மனிதம் வளர்கிறது.

கடைசி வரையில் கார்ல் மார்க்ஸை சந்திக்க முடியவில்லை. ஒரு பெண்ணுக்கு மாப்பிள்ளை பார்க்க டவுனில் இருக்கும் அனாதை இல்லம் சென்று விட்டானாம். பேருந்தில் திரும்புகையில் இது பற்றி நான் பத்திரிக்கையில் எழுதப் போகும் கட்டுரைக்கு என்ன தலைப்பிடலாம் என்று யோசித்தேன்.

கார்ல் மார்க்சும், அவன் ஊர்க்காரர்களும் செய்யும் சேவைக்கும், தொண்டுக்கும் எல்லையே இல்லை என்பதாலோ என்னவோ "வானமே எல்லை" என்ற தலைப்பே என்னை ஆட்கொண்டது.

***

## கடிஸ் !

- அதிர்ஷ்டமே இல்லாத நகரம் எது ? – "லக்னோ".
- கண் தானமே செய்யாத ஊர் எது ? – "ஐதராபாத்".
- முட்டை அதிகமாகக் கிடைக்கும் இடம் எது? – "எக்மோர்" (Egmore).
- பஸ் போகாத ரூட் ? – "பீட்ரூட்".
- பெண்களை மதிப்பில்லாமல் அழைக்கும் ஊர் எது ? – "கன்னிவாடி".
- பரிசுகளை வாங்கிக் குவிக்கும் ஊர் எது ? – "விருது"நகர்.
- அடைக்கவே முடியாத கேட் எது ? – "அட்வகேட்".
- டெலிபோன் பூத் உரிமையாளர்களுக்கு நோய் வந்தால் எங்கே செல்வார்கள் ? – "அலோ"பதி மருத்துவமனைக்கு.
- சைக்கிள் கடை வைத்து இருப்பவர் பையன் எப்படி அழுவான் ? – "வீல் வீல்" என்று அழுவான்.

- C. Rajasekaran, II B.Com., (E)

## சிந்தனைச் சொற்கள்

★ முடியாது என்ற சொல் முட்டாள்களின் அகராதியில் மட்டுமே உண்டு.
– நெப்போலியன்.

★ நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகி விடுகிறாய்.
– சுவாமி விவேகானந்தர்.

★ நல்லொழுக்கத்தை விட மேலான பொருள் எதையும் தந்தை மகனுக்குத் தரமுடியாது.
– முகமது நபி.

★ உன்னைப் போல் பிறரை நேசி. – பைபிள்.

★ தமையன் தந்தைக்குச் சமம். தம்பி பிள்ளைக்குச் சமம்.
– கம்பர்.

★ கருணை உள்ளவர்களிடமே கடவுள் இருக்கிறார்.
– வள்ளலார்.

★ கடந்ததைப் பற்றி வருந்தாதே. வருவதைப் பற்றி கவலைப்படாதே. – புதுவை அன்னை.

★ விவேகமற்ற வீரம் கோழைத்தனம். வீரமற்ற விவேகம் முட்டாள்தனம்.
– முத்துராமலிங்கத்தேவர்.

★ கண்ணால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய். தீர விசாரிப்பதே மெய். – அரிஸ்டாட்டில்.

★ இடையறாத சாதனைதான் வெற்றிக்கு வழி.
– ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

★ கல்வியில்லாத உயிர் செதுக்கப்படாத கல் போன்றது.
– எடிசன்.

★ எரியும் விளக்காயிரு. அப்போது தான் மற்ற விளக்குகளை ஏற்றி வைக்க முடியும். – தாகூர்.

★ உழைப்பு உடலை வலிமையாக்கும். துன்பம் மனதை வலிமையாக்கும்.
– செனேகா.

★ நம்மிடம் வம்புக் கதைகளைப் பேசுகிறவர்கள் நம்மைப்பற்றி பிறரிடம் வம்பளப்பார்கள்.
– யாரோ.

★ பொறுமை கசப்பானது. ஆனால் அதனால் ஏற்படும் விளைவோ இனிப்பானது. – ரூஸோ.

- T. Selvakumar, I B.Sc., (C)

# இது சத்தியம் !

– க. மாரிமுத்து, எம்.காம்., முதலாம் ஆண்டு.

ரெங்கசாமி ... டேய் ரெங்கசாமி... இங்க வாடா.... நாளைக்கு நம்ம தலைவர், அட அதாண்டா நம்ம மக்கள் கட்சி தலைவரு காத்தவராயன் டவுனுக்கு வர்றாருல்ல... அதுக்கு நாம நம்ம மாங்குடி கிராமம் சார்பாக பெரிய கட்டவுட் வைக்கணும்... என்ன சொல்ற...!

அது சரி முருகண்ணே.... கட்டவுட் வைக்கிறதுக்கு கொஞ்சம் பணம் வேணும். கட்டவுட் வைக்கிறதுக்கு இடம் பார்க்கணும்... அதுக்கு ஒரு வழி சொல்லுங்க...

அதெல்லாம் செய்யாம இருப்பேனா ... ! இன்னைக்கி கட்சி மாவட்டத் தலைவருகிட்ட போயி பணம் எல்லாம் வாங்கிட்டு வந்துட்டேன். அதோடு மட்டும் இல்லாமல் கட்டவுட் கட்டுறதுக்கு இடமும் பார்த்து வச்சிட்டேன். நாளைக்கு சாயங்காலம் 5 மணிக்கு தலைவரு வந்துடுவாரு...! இந்தா 500 ரூபாய். உன்கூட வேலை செய்ய இரண்டு ஆளை கூப்பிட்டுக்கோ...! என்றான் முருகன்.

முருகண்ணே .... கொஞ்சம் இருங்க... நீங்க பாட்டுக்கு பணத்தை கொடுத்தா எப்படி? கட்டவுட் எங்க கட்டணும்ன்னு சொல்லவே இல்லையே? என்று கேள்வி எழுப்பினான் ரெங்கசாமி.

ஓ...! அதுவாடா... டவுனுக்கு போற பாதையில முக்கு ரோடு. அட அதாண்டா ஜங்சன் ரோட்டுல கட்டவுட்ட வைச்சிடலாம் என்றான் முருகன்.

அண்ணே... அந்த இடம் வேணாம்னே...வேற இடத்துல கட்டவுட் வைச்சிடலாம்.

ஏலே... என்ன வார்த்தையில பேசுற ... அபசகுனமான வார்த்தையெல்லாம் இனிமே பேசாதடா... என்றான் முருகன்.

அண்ணே...! நான் எதுக்கு சொல்றேன்னா...! நீங்க சொன்ன இடம் மிகவும் நெரிசல் நிறைந்த இடம். அது மட்டும் இல்லேண்ணே.... குறுகிய பாதை வேறு... வேகத்தடை கூட இல்லேண்ணே.... அந்த ரோட்டு பக்கத்துல குழந்தைகள் படிக்கிற பள்ளிக்கூடம் வேறு இருக்குது. நம்ம ஊரு பிள்ளைகளெல்லாம் அங்க தான் படிக்கிறாங்க... ஏன் உங்க ஒரே மகன் சரவணனும் அங்க தான் படிக்கிறான். அந்த ரோட்டுல கட்டவுட் வைச்சா.... ஏதாவது விபத்து ஏற்பட்டு விடும்ண்ணே... நான் சொல்லுற வார்த்தையில பொதுநலன் மட்டுமில்லை... உங்க சுயநலமும் அடங்கியிருக்கு ... ! என்று முடித்தான் ரெங்கசாமி.

ரெங்கசாமி... நான் கஷ்டப்பட்டு கட்டவுட் கட்டுறதுக்கு அனுமதி வாங்கியிருக்கேன். எனக்கு மத்தவங்கள பத்தி எல்லாம் கவலை கிடையாது. எனக்கு என் தலைவரு காத்தவராயன் தான் முக்கியம். உன்னால முடிஞ்சா வேலை செய். இல்லாட்டி பணத்தை திருப்பி கொடுத்திரு... ஏதோ என்கூட பழகினவனாச்சேன்னுதான் இந்த வேலையை உன்கிட்ட கொடுத்தேன். நீ எனக்கு அறிவுரை சொல்லுற ... என்றான் முருகன்.

அண்ணே... வேண்டாம்னே...! நான் கூலிக்கு வேலை செய்யறவன்.... ஏதாச்சும் வேலை கிடைச்சாதான் எங்க வீட்ல அடுப்பெரியும்... என்றான் ரெங்கசாமி.

சரி... சரி... சீக்கிரமா போயி வேலைய முடிச்சுட்டு வா... மீதி பணத்தையும் வாங்கி வச்சுக்கோ ... என்றான் முருகன்.

கட்டவுட்டை கட்டினான் ரெங்கசாமி. மறுநாள் அந்த அரசியல்வாதி காத்தவராயனும் பொதுக்கூட்டம் நடத்தி சென்று விட்டார்.

ரெங்கசாமி பார்த்தாயா? எங்க தலைவரு எப்படி பேசினாரு... ஒவ்வொரு பேச்சுக்கும் ... அதாண்டா, எதிர்க் கட்சிகாரங்க பேச்சுக்கு வார்த்தையால தண்ணி காட்டிட்டாருல்ல... தலைவருன்னா... தலைவர் தாண்டா. அதெல்லாம் சரி கட்டவுட்டை உடனே கழட்டிடாதே. இன்னும் ஒரு நாள் இருக்கட்டும். தலைவர பார்த்தியா கட்டவுட்ல எப்படி சிரிச்சுக்கிட்டு இருக்காக... அவரை வரைஞ்ச கைக்கு பூமாலை சூடணும்... என்றவாறு அரசியல்வாதியை புகழ்ந்தான் முருகன்.

அன்று மாலை 4 மணிக்கு பள்ளிக்கூடம் முடித்து சிறுவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது முக்கு ரோட்டை கடந்து வரும்போது எதிரே வந்த பஸ் சிறுவன் ஒருவன் மேல் மோதியது. அடையாளம் தெரியாத அளவுக்கு சிதைந்து இறந்து கிடந்தான்.

சிறிது நொடிகளுக்கு பிறகு அண்ணே.... அண்ணே... முருகண்ணே... என்றவாறு பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தான் ரெங்கசாமி.

என்னடா...! என்னமோ எழவு விழுந்த மாதி ஓடியாற... என்ற விசயம்...?

ஆமாண்ணே....! இழவு தான் விழுந்திருச்சி.... உங்க செய்கையால ... அதாண்ணே... நீங்க கட்டவுட் வச்சிங்கில்ல... அந்த இடத்தில பஸ் மோதி ஒரு சிறுவன் செத்து போயிட்டான்னே .... அடையாளம் தெரியாம சிதைஞ்சு போயிட்டான்னே...! என்றான் ரெங்கசாமி.

சரி வாடா... போயி பார்க்கலாம்... என்றவாறு ரெங்கசாமியையும் அழைத்துச் சென்றான் முருகன்.

அங்கு சென்ற முருகன் அதிர்ச்சியில் உறைந்து போனான். உடனே பேராராய் பெருங்கண்ணீருடன்

ரெங்கசாமி... இது... என்மகன் சரவணன்டா... என் ஒரே மகன் சரவணன்டா... செத்து போயிட்டானே.... ஐயோ.... ஐயோ.... என்று அலறினான் முருகன்.

அண்ணே... அழாதே..! எல்லாம் உன்னால வந்ததுதான். இப்ப அழுது என்ன செய்ய....? போன உசுரு திரும்பி வரவா போகுது...? அந்த பிஞ்சு உள்ளம் எப்படி துடிதுடிச்சு இறந்துச்சோ...? நீதான் வினைய விதைச்சு இப்ப அதுக்கு தண்டணையா உன் மகனே பலியாயிட்டான். ஆயிரம் காலத்து பயிரை அநியாயமாய் கொன்னுட்டேயே என்று கண்ணீர் மல்க கூறினான் ரெங்கசாமி.

போதும்டா....! என்ன ரொம்ப கொல்லாதடா ? என் இதயமே வெடிச்சி சிதைஞ்சது போல இருக்குடா... நீ வேற என்ன கொல்லாம கொல்லுற... என்று கண்ணீருடன் கதறி அழுதான் முருகன்.

முருகண்ணே.... அரசியல் ஒரு அழுகி போன முட்டை மாதிரி... அதை உடைச்சு நாம் சுவாசித்தால் நமக்கு தான் நோய் வரும். அரசியல்வாதிங்க மக்கள ஏமாத்துறவங்க... அது மட்டுமல்ல வாங்கி பழக்கப்பட்டவங்க... ஏழைகளுக்கு கொடுக்க மனமில்லாதவங்க... அவங்களுக்காக உயிரை விடுறது... கோஷம் போடுறது எல்லாம் முட்டாள் தனம். அரசியல்வாதிங்க பொது நலத்துல சுயநலம் தேடுறவங்க. ஏதோ நாட்ல மக்கள் பிரதிநிதியை தேர்ந்தெடுக்கறது நமது கடமை. அதுக்கு ஓட்டு போடுறோம். அத்தோட எல்லாமே முடிஞ்சிறிச்சு. நம்மள மாதிரி ஏழைகளுக்கெல்லாம் உழைப்பு தான் பெரிய சொத்து . சிந்தித்து செயல்படுங்க. இந்தாங்க 500 ரூபா பையனை நல்லபடியா அடக்கம் பண்ணுங்க என்று அறிவுரை கூறினான் ரெங்கசாமி.

ரெங்கசாமி நீ தெய்வம்டா.. நீ என் அறிவு கண்ணை திறந்துட்டே.... இனிமேல் யாரு பின்னாலேயும் கொடி பிடிக்கமாட்டேன். யாரு கட்சியிலயும் சேரமாட்டேன். என் கட்சியெல்லாம் இனிமேல் உழைப்புதாண்டா... இது சத்தியம் என்று அழுதவாறு சூளுரைத்தான் முருகன்.

* * *

Do you know these "ICE"

Maintain law and order - POLICE

Association in crime - ACCOMPLICE

Envy on other's belongings - AVARICE

Used in measuring - DEVICE

- A. Surendran, III B.Com., (R)

## பழமொழிகள்

– அ. அகஸ்டின் அன்புராஜ், II B.Sc., (C)

★ நல்ல வரவேற்பே பாதி விருந்து.

– ஜப்பான்.

★ வாக்குறுதி என்பது ஒருவகையில் கடனே.

– ஆப்பிரிக்கா.

★ இளமையில் முகம் அழகு. முதுமையில் உள்ளம் அழகு.

– ஸ்வீடன்.

★ ஒருவன் சிரிக்கும் போதெல்லாம் அவனது மரணம் தள்ளிப்போடப்படுகிறது.

– இத்தாலி.

★ ஒரு மனிதனின் பெருமையும், சிறுமையும் அவனது இதயத்துக்குள் இருக்கின்றன.

– சீனா.

★ முதல் தவறு இரண்டாவது தவறிற்கு இருக்கையைத் தயார் செய்கிறது.

– செக்.

★ பணம் இருந்தால் உன்னை உனக்கேத் தெரியாது. பணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்குமேத் தெரியாது.

– பிரான்ஸ்.

★ உங்களுக்காகப் பொய் சொல்லுகிறவன், உங்களுக்கு எதிராகவும் பொய் சொல்லுவான்.

– அமெரிக்கா.

## தமிழ்

– பா. பிரபாகரன், II B.A., (H)

★ தேன் இனிய சுவை என்கிறார்களே... அது என் தெய்வத் தமிழை விட சுவை மிகுந்ததோ?

★ பாலின் நிறம் வெண்மை என்கிறார்களே... அது என் தமிழ்ப்புலவர்களின் மனத்தை விட வெண்மை மிகுந்ததோ?

★ இரத்தத்தின் நிறம் சிவப்பு என்கிறார்களே... அது என் தமிழ்த்தாயின் கோபக் கண்களை விட சிவந்ததோ?

★ பூவின் மணம் இனியது என்கிறார்களே... அது என் தமிழ் மண்ணின் மணத்தை விட மணம் மிகுந்ததோ?

★ கடலின் ஆழம் பெரியது என்கிறார்களே... அது என் தமிழ்த்தாயின் அன்புக் கடலை விட ஆழம் மிகுந்ததோ?

# இன்டர்வியு

– டி. பிரசன்னா, பி.எஸ்.சி., இயற்பியல் மூன்றாம் ஆண்டு

நேர்முகத் தேர்வு நடக்கும் அந்தக் கூட்டத்தைப் பார்த்ததுமே பிரமித்துப் போனான் மாதவன். பணத்தை வாரியிறைத்திருந்தது அதன் செழிப்பில் தெரிந்தது. உள்ளே ரேமண்ட் சூட் ஆண்களும், ஜீன்ஸ், டீ–ஷர்ட் பெண்களுமாய் நிறைய பேர் வரிசையாக அமர்ந்திருந்தார்கள். அனைவரும் மேல் தட்டு வர்க்கத்தினர் என்று பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்து போனது. இத்தனை போட்டியாளர்களுக்கு மத்தியில் தன்னால் இன்டர்வியூவில் சோபிக்க முடியுமா என்று மாதவனுக்கு சந்தேகமாக இருந்தது. அவன் இதுவரையில் எத்தனையோ இன்டர்வியூக்களுக்குச் சென்றிருந்தாலும் ஏனோ அவனுக்கு புதுமையான அனுபவமாகத் தோன்றியது.

தன்னைத் தவிர, அமர்ந்திருந்தவர்கள் அனைவரும் மிடுக்காக இருப்பதாய் உணர்ந்தான். அத்தனை பேர் வாயிலும் ஆங்கிலம் புகுந்து விளையாடியது. அச்சூழலே அவனை தர்ம சங்கடத்திற்குள்ளாக்கியது. தன்னைத் தானே தேற்றிக்கொண்டு மோதிப்பார்த்து விடுவதென முடிவு செய்தான். தனக்குள்ள பொது அறிவுத்திறன் தன்னைக் கைவிடாதென உறுதியாய் நம்பினான்.

நேரம் ஆக ஆக ஒவ்வொருவராக உள்ளே சென்று வந்தார்கள். வெளியே வருபவர்களின் முக பாவங்களை கூர்ந்து கவனித்தான். சிலர் சந்தோஷமாக வெற்றிப் புன்னகை சிந்தியபடி வந்தார்கள். சிலர் அதற்கு நேர்மாறாய் சோகத்தோடு திரும்பினார்கள்.

ஒருவரை மடக்கி விசாரித்தான். "கேள்விகளெல்லாம் எப்படி ஸார்?"

அவர் உதட்டைப் பிதுக்கினார் "வெரி டிஃபிகல்ட்"

மறுபடி ஒரு பயப்பந்து வயிற்றுக்குள் உருள, சோர்ந்து போனான்.

"மிஸ்டர் மாதவன்" – ஆபீஸ் பாய் அழைக்க, நழுவிய ஃபைலை மார்போடு அணைத்தபடி அறைக்குள் நுழைந்தான். உள்ளே மூன்று பேர் கம்பீரமாய் அமர்ந்திருந்தார்கள்.

"யூ ஆர் மிஸ்டர் மாதவன் ?"

"எஸ் ... ஸார்"

"யுவர் சர்ட்டிஃபிகேட்ஸ்?" எடுத்து நீட்டினான். அவற்றைப் புரட்டிப் பார்த்த மூவரும், கிசு கிசுப்பாய் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். மறுபடியும் ஒருவர் கேட்டார்.

"உங்க கம்ப்யூட்டர் நாலேட்ஜ்?"

சட்டென்று ஃபைலிலிருந்து ஜாவா, சி++, யூனிக்ஸ் என்று தான் கற்றுக்கொண்ட பல கம்ப்யூட்டர் கோர்ஸ்களின் சான்றிதழ்களை எடுத்துக் கொடுத்தான். அதை லேசர் கண்களால் ஆராய்ந்த மூவரும் மாதவனை அடுத்த அறைக்குச் சென்று அமரச் சொன்னார்கள். அவனுக்கு அங்கொரு வினாத்தாள் கொடுக்கப்பட்டு, பதினைந்து நிமிடத்தில் விடை எழுதித் தருமாறு பணிக்கப்பட்டான்.

அனைத்தும் பொது அறிவு வினாக்கள். சரசரவென்று எழுதி பத்தே நிமிடத்தில் நீட்டினான். பதில் கூறுவதாய்ச் சொல்லி மாதவனை வெளியே காத்திருக்கச் சொன்னார்கள்.

காத்திருக்கும் நொடி ஒவ்வொன்றும் மாதவனுக்கு ஒரு யுகமாய்க் கழிந்தது. இதயம் படபடவென அடித்துக் கொண்டது. உலகத்துக் கடவுள்களையெல்லாம் வேண்டிக் கொண்டான்.

சரியாய் அரைமணி நேரம் கழித்து அழைக்கப் பட்டான். அவனை இன்டர்வியு செய்த மூவரில் ஒருவர் பேசினார். "மிஸ்டர் மாதவன், நாங்க நடத்தின நேர்முகத் தேர்வுல நீங்க பாஸாயிட்டீங்க... கங்க்ராட்ஸ், உங்க பையனுக்கு எல்.கே.ஜி. அட்மிஷன் தர்றதா முடிவு பண்ணியிருக்கோம்".

* * *

## நீங்கள் தேடும் பழமொழிகள்

– எஸ். கணேசமூர்த்தி, III B.Com., (E)

- ★ செல்வாக்கை விட சொல்வாக்கு மேலானது.
- ★ உண்மை கண்ணீர் சிந்தினால், பொய் இரத்தம் சிந்த வேண்டும் ஒரு நாள்.
- ★ இறைவனுக்கு நன்றி சொல்லுங்கள். இறைவன் தனது தோற்றத்தில் மனிதனைப் படைத்தான் என்பதற்காக.
- ★ உலகிற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்பீர்கள் என்றால் முதலில் மௌனமாக இருங்கள். இது வாழ்க்கையின் ரகசியத்தைச் சொல்லித்தரும்.
- ★ நன்மையை ரகசியமாகச் செய்யுங்கள். அப்பொழுது தான் நம்மைப் பற்றி வெளிப்படையாகப் பாராட்டுவார்கள்.
- ★ பாரபட்சமானவர் ஒரு கண் உடையவர்.
- ★ பாவம் செய்பவனைத் தடுக்காதே. ஏனென்றால் இந்த உலகில் அதர்மமாக வாழ்ந்து தர்மத்தைக் கூறப்புறப்பட்டவன் அவனே.
- ★ உண்மையை அறிய விரும்பினால் சிறிது பொய் பேசுங்கள் தவறு இல்லை.
- ★ வாழ்க்கை என்பது வாழ்ந்து மகான் ஆவதற்கே. ஆனால் பலரும் தேர்ச்சி அடையாமல் மீண்டும் பிறக்கிறார்கள்.

# SATI

Source : **SATI,** a Tamil short story by **R. Bathrinath**
In English : **V. Suresh Taliath,** Department of English

Rajaram Mohan Roy tried to abolish Sati, an inhuman practice of his days. The story realistically describes a like situation to shock us into the realisation that such situations still prevail.

- K. Sankara Narayana.

Whenever I recall the real life story narrated by my North Indian friend Narendra Varma, it always causes a shudder in me.

I was a free bird roaming around Chennai on my Hero Honda. One day I was sent to Delhi on some training.

The two of us, Narendra Varma from Rajastan and my ownself from Tamilnadu both engineer were to undergo training on a newly imported foreign machine in our Delhi factory.

I knew no Hindi at all. But in six months, Narendran helped me understand Hindi quiet well. Yet when it came to speaking, there was always some hitch.

When there was no work we would go around Delhi. On such an occasion he told me this story.

Just ahead of us, on the street a group of media persons were interviewing the street hawkers. There was a woman reporter in the group smoking all the while.

"Women are much advanced in your place... see there ... Look at that lady reporter smoking in style". I pointed to a woman in the group.

He just laughed and said, "It may be so here. But in my own part of the country, people are still very superstitious... follow such practices. And there, look at this practice of 'Sunti Maha Pooja'..."

"What's that .... ?" I was curious.

"That is Sati ... the wife being burnt on the husband's funeral pyre...", he explained.

"Oh! What's it...What do you mean!"

"I am telling the truth... In my own place, there still lives my friend who is an eye-witness to this. Just ask him".

I had read about Sati in text books. A superstitious practice of the olden days. I thought it got abolished in the days of Rajaram Mohan Roy. That was what the text books told me.

Narendran went on. He told me the whole story.

Narendran's friend, Makkal Singh lived in a village near Bharatpur in Rajastan. His elder brother died. The wife was also taken to the cremation ground on that day. Makkal Singh had no idea why she also had been taken there.

When the pyre was lit and it started burning well, she was asked to go round the funeral pyre. Even as she was doing this, some one pushed her in to the pyre. But she came out screaming and was running away. Now, a couple of stout fellows gave her a chase and caught hold of her. The struggling woman was dealt a cruel blow with a club on the head. She fainted, perhaps she died. None could be sure. They bundled her up and threw her into the raging fire.

Narendran's story was sickening. It almost made me faint.

"Stop it. I can't bear it". I cried.

I couldn't believe it. But Narendran told me "Go with me to Rajastan. I'll take you to that friend of mine. You'll know then."

"The country has a law against Sati. Why can't he testify to the crime" I protested.

"Yes ... there is. Even the support to Sati attracts punishment. But my friend is afraid to offer witness...", Replied Narendran.

I returned from Delhi after the training. Even after six months of listening to it, Narendran's story still continued to haunt me. The sheer cruelty of it! ... Luckily there isn't anything like it in our place.

My mother called out to me "Ravi, here is a letter from Malathi. Asks how your Delhi trip was. She asks you to come to Kovai once atleast". It was from my elder sister.

"I'm going to Coimbatore, next week. I'll meet

her then. It's so long since we have seen each other. She may be certainly interested in knowing about my Delhi training". I remarked.

Once you are an engineer you are in for trouble. There will be frequent complaints from places about machines. The machine doesn't work-comes a call from one place. The new machine here is faulty-comes another call from a different place. You have to train men on the new machine-comes another assignment. Altogether you will constantly be driven around. Often I wish I had just been a clerk. I could then always remain in my place just tied to my chair. But this time the call trip was to be on Coimbatore-Dharmapuri - Bangalore line. It was welcome. I could spend a day with Malathi in Kovai. Will be meeting after so many years, she would always listen to all my stories, even tall tales. These five years since she got married, I haven't met her. She was angry with me for that. But I had just joined this job and had been on tour almost all the while.

I reached Kovai. I found that the city had changed a lot in five years. I had been here five years back accompanying my newly married sister to her husband's home. She was the eldest daughter-in-law in the family.

I reached the house in Sai Baba's colony. It was her mother-in-law who welcomed me.

"Come Ravi ... haven't seen you for a long time. How is your mother?" Now, she called out, "Malathi... see, your brother has come".

Malathi appeared from the kitchen cleaning her hands with the end of her Sari. "Come Ravi". She said. She was all smiles. But I was shocked on looking at her.

Was it Malathi? Could this be? She had gone so thin, so lean. Such dark shadows under her eyes... half her hair was gone ... was she ill? ... My mother hadn't said anything. Probably she thought I would be scared. I felt very bad.

"Akka... were you down with the typhoid. You look terribly thin". I was concerned.

"Shh... less loud." She gesticulated. Both the father-in-law and mother-in-law were within hearing, she indicated.

"Where is he?" I asked.

"My husband? He is on tour".

I laughed, "Why Akka ... I thought it was only my lot".

She fed me well that day. Cooked specially for me. She was talking ... But I couldn't talk much. What a girl was there before marriage! Now, what a change! She looked like a T.B. patient. I couldn't bear it. I sensed it. She was trying to hide something. But I would find it out. I would not let it go.

"You look so glum." What's it? She queried.

"No, Akka, there is something wrong with you. Otherwise you shouldn't have gone so thin. Tell me what's it really? I persisted. She didn't say anything then.

In the evening, both of us went to the temple. On the way she began, "Don't you talk about my growing thin when my mother-in-law is arround".

"Why don't you tell me ... what's your problem? You're still so diffident". I corssed her.

"What shall I say. There is such work at home. Such chore. That's all". She said.

"What a woman are you? Won't your mother-in-law do anything? Or your sister-in-law is there? Won't they do anything?" I asked.

"No .... no ...., She is a Professor. How can I ask her to work in the kitchen". She sounded helplessly.

She was the eldest daughter-in-law in a family of five brothers. The second daughter-in-law was a Professor. The three other brothers were yet to be married. All of them were in good jobs too.

"Why can't you employ a cook? You are all rich enough. Why should you be trampled like this. Why can't your husband, do something about it? Can't he talk about it?" I was pressing.

"You young fellow ... no such chatter... In a joint family one has to sacrifice like this". She sounded typical.

"Why can't others too sacrifice ... should you alone?" That was my argument.

"I don't understand what you say. Perhaps you speak something from the books. I am not well read. I'm quiet used to these chores. There is only one

worry. He shouldn't drink so much"

I was shocked.

"Does he drink? Did you not protest?"

I was concerned.

"He would get angry. I can't question him. Please don't ever tell Amma about this". She was in tears.

"Akka ... you live in such a hell".

"No ... no ... Not so. You see, I go to the temple everyday. I worship there everyday. Everything will be alright by and by. Come let's go in". She went inside the temple.

Such harassing work. Not only for the husband but also for the entire family. Above all her mechanical acceptance of it as duty. And the complex which makes her carry patiently the cross of her educated sister-in-law's share too. Her regular temple visits to make her husband drink less. All this happens. There is no Sati in our place. But there definitely is a new form of Sati - a social conspirary - the silent killer.

★★★

## மீண்டும் ஒரு சுதந்திரம்

– எம். மாடபோத்தி, I M.Com.,

அன்று

ஆயிரம் கனவோடு அல்லல்பட்ட சுதந்திரம்

பல ஆயிரம் நாண்கள் கொண்டு வெல்லப்பட்ட சுதந்திரம்

இன்று

அரசியல்வாதிகளிடம் அல்லாடும் சுதந்திரம்

அரக்கர்வாயில் தள்ளாடும் சுதந்திரம்

ஊழல் பேய்களிடம் உருளும் சுதந்திரம்

சாதல் கொடுக்கும் பெருமை சுதந்திரம்

சாதி சங்கங்களை ஊக்குவிக்கும் சுதந்திரம்

நீதி கேட்டுப் போராடும் சுதந்திரம்

தீவிரவாதிகள் கையில் புரளும் சுதந்திரம்

நாட்டைக் கொடுந்தீயிலிட்டுக் கொளுத்தும் சுதந்திரம்

பாரதமாதே படைத்திடு

மீண்டும் ஒரு சுதந்திரம்

## உங்கள் சிந்தனைக்கு

– கே. ரவிச்சந்திரன், III B.Sc., (Phy)

| | |
|---|---|
| மிக மிக நல்ல நாள் | – இன்று |
| மிகப்பெரிய வெகுமதி | – மன்னிப்பு |
| மிகவும் வேண்டாதது | – வெறுப்பு |
| மிகப்பெரிய தேவை | – சமயோகித புத்தி |
| மிகக்கொடிய நோய் | – பேராசை |
| மிகவும் சுலபமானது | – குற்றம் காணல் |
| கீழ்த்தரமான விஷயம் | – பொறாமை |
| நம்பக்கூடாதது | – வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | – அதிகப்பேச்சு |
| செய்யக்கூடாதது | – உபதேசம் |
| செய்ய வேண்டியது | – உதவி |
| விலக்க வேண்டியது | – விவாதம் |
| உயர்வுக்கு வழி | – உழைப்பு |
| நழுவக்கூடாதது | – வாய்ப்பு |

## பறவைத் தகவல்கள்

★ உலகில் 9000 பறவை இனங்கள் வாழ்கின்றன.

★ உலகிலேயே மிக நீளமான இறக்கை உடைய பறவை அல்பட்ராஸ்.

★ உலகின் மிகச்சிறிய பறவையான தேன் சிட்டுவைப் போல தொன்னூற்று ஏழாயிரம் மடங்கு பெரியது நெருப்புக்கோழி. இதுதான் உலகில் பறவை இனங்களில் மிகப்பெரியது.

★ பறவையின் சராசரி உடல்வெப்ப நிலை 41°F (டிகிரி பாரன்ஹீட்)

★ பறவைகளுக்கு மோப்பசக்தி மிகக்குறைவு என்றாலும் பார்வையும், கேட்கும் திறனும் மிக அதிகம். மண்புழு பள்ளம் தோண்டும் ஓசை கூட கருப்பு நிற பறவை இனங்களுக்கு கேட்கும். 40 அடி உயரத்தில் இருந்து கொண்டே தரையில் இருக்கும் மிகச்சிறிய பூச்சியையும் பார்க்கக்கூடிய திறமை பறவைகளுக்கு உண்டு.

★ ஆப்பிரிக்காவில் வாழும் சிவப்பு நிற அலகு கொண்ட கியூலியா என்ற பறவைகள் தான் உலகிலேயே அதிக எண்ணிக்கையில் வாழ்கின்றன. இவற்றின் எண்ணிக்கை சுமார் 1000 கோடி.

★ அதிக நாட்கள் அடைகாக்கும் பறவை அல்பட்ராஸ். அடைகாக்கும் காலம் சுமார் 82 நாட்கள்.

★ ரஷ்யாவில் 1964ல் ஆண்டியன் காண்டர் பறவை இறந்து போனது. இது இறக்கும் நேரத்தில் அதன் வயது 72.

# SAINT SUDDHANADA BHARATHI (1897 - 1990) HIS IDEALS AND DEEDS

- Dr. **G. Radhakrishnan,** Reader in History

## I. INTRODUCTION

From time to time Tamilnadu has given birth to luminaries like Appar, Thiru Gnana Sambandar, Sundarar, Manikkavasagar, Thayumanavar and Ramalinga Adigal and so on. Saint Shuddhanada Bharathi is one among them. These Saints have made indelible impact upon the social life of the Tamils. Their works speak of their words and deeds and show the right path for the posterity. Nature seems to exist for the excellent.

Even at the dawn of the Twentieth Century India presented a gloomy picture in the sociar life of the people. The social evils such as iinfanticide, child marriage, widowhood, slavery of women, dowry and illiteracy were prevalent in India. A lot of reforms were to be done so as to remove the social evils. The need of the hour then was to free the nation from the British and to free the people from social evils. Saint Suddhanada Bharathi involved in the freedom struggle and did his best to reform the society.

This paper makes an attempt to focus the ideals and deeds of Suddhananda Bharathi. The paper is mainly based on primary sources and secondary sources are also used.

Suddanda Bharathi was born on 11th May 1897 at Sivaganga in Tamilnadu to pious parents Kamakshi Ammal and Jhatadhara Ayyar. During his life span between 1897 and 1990 he met great personalities. He was a great Tamil poet, renowned scholar, prolific writer, spiritualist, philosopher and polyglot. Devoted much of his time in spiritual development and writing, he rendered valuable service to the society. Yoga Samaj was founded by him at Adyar to train the aspirants and to serve as the centre of spiritualism. Later it was shifted to Sivaganga.

## II. Freedom Fighter, Writer and Journalist

Suddhananda Bharathi was a freedom fighter under the leadership of Tilakji and Gandhiji. He composed many songs which inspired many people imbibing the spirit of nationalism. Because of his talents in composing poems, he came to be called Kavi Yogi. Involved in freedom struggle, he took part in anti-liquor agitation in Karur during the Non-cooperation movement. He attended the meeting of Gandhiji in Tirchy. While Gandhiji came to Madras he was a member of Reception Committee. Kavi Yogi spent an hour with Gandhiji at Hindi Prachara Sabba in Madras. During boycott of Simon he actively participated and delivered lectures in many places.

Being a proific writer he wrote a good number of books which include poetry, prose, drama, philosophy, novel etc. His magnum opus is Bhartha Sakthi Mahakaviyam published in 1948. V.V. Subramania Iyer, a veteran freedom fighter in his preface to Bharatha Sakthi Mahakaviyam writes, "It is an epic written in Tamil after many centuries". He spent many years in Auraobindo Ashram and during this time he observed silence for about twenty five years. During his silence he spent his time in meditation, yoga practice and writing books in many languages, like Tamil, English, French, Hindi, Telugu and Sanskrit. He acquired great proficiency in more than a dozen languages, Indian and foreign. He was an expert in composing verses in Telugu language.

With a view to dissiminate nationalism he had run a journal Bharatha Sakthi and then he served as an editor to Swarajya, journal. He wrote many articles which were published in different journals and dailies like Swadesamitran, Dinamani, Lokopakari, Kalaimagal, Ananda Vikatn, Kalki, Tamil Nesan, Eezha Kesari, Sunday Times, Kalyanakalpatharu, Divine Life, Vision etc. Volumes of books written by him belong to different subjects. It is obvious that he contributed much for Tamil literary development as

he wrote commentary to many classical Tamil literatures. The feat of achievement attained by him in writing a large number of books is really admirable. Perhaps he would be the first among the writers who wrote large number of books in Tamilnad in the 20th Century.

### III. His ideals and deeds

"Swadeshi is my country, Humanity is my caste?", was the reply of Shuddhananda Bharathi (hereinafter he is mentioned Kavi Yogi) when he was asked which country and which caste he belonged to. He believed that caste feeling was the cause of all evils. He was of a view that a man whose heart was full of universal love, identifies himself with all beings and lives only to serve them with the tender care of a mother. "Caste division is an evil, Untouchability, widowhood, slavery of women all these social evils came from caste differences". Kavi Yogi stood a model that he established schools in the Harijan areas and rendered service to them litting the light in the cottages enlightening them.

#### i) Unity

Stood for unity the backbone of country's integrity, he writes, "Every human problem is a question of unity and harmony. Disharmony and division are the causes of all failures, quarrels and miseries. Division is mental ignorance. Unity is the natural course of life. Nations unite only when hearts unite; establish hence harmony in the heart".

#### ii) Education

To him knowledge is the soul of bliss and ignorance the source of sorrows. Knowledge develops by proper education. He believed giving education to every house would enlighten the society. He insisted the learned people to teach ten each. Kavi Yogi started schools in villages and served as a teacher - Kattuputtur, Pamani Palaiyur etc. He started that the education is limitless, the world is university, life is youth and nature is teacher.

#### iii) Women's Welfare

Advocated for the welfare of women, he says, "Man is the root, woman the trunk and the children the flowers and fruits of the growing family. Woman is the inspiring mate of man in spiritual and temporal life. Woman is not a mere child bearing machine". He vehemently condemned the dowry system.

Kavi Yogi delivered a speech in a conference held at Gokhale Hall in Madras, which was presided by T. Vijayaraghavachari. He spoke on that occasion as if a woman disclosed her aspirations of life. The speech was :

"I am a modern woman. I have a conscience of my own. I act according to its guidance. I will marry a youth who is suitable to my age, education and feelings, I will marry him at 18. If he uses snuff, smoking, drinking and other bad habits I will remove the habits from him. My husband must be pure both outwardly and inwardly. If he dies earlier by fate I will remarry and remain a housewife.

#### iv) Philosophy

Being a practical philosopher he raised a question to those who held the view that world is illusion (Maya). He remarks, "Philosophers argue whether the world is real or unreal, whether the world is created by God. Many religious coersion will come to an end if this unwanted quarrel ends. Why should one say the world is unreal and dream? Such false arguments lead to laziness which affects the progress". He rightly puts a vital question, "Could you remain unfed without food saying life is illusion?"

The quest of a man is why we take birth and what its purpose is. The life is spent without proper understanding or we do not know what its purpose is. Kavi Yogi answers to this that there are two Dharmas 1. Atma Dharma and 2. Yuga Dharma. Some are born to perfect their lives and some are born to make others happy. To him fulfilling the above is the very purpose of life. His work "Yoga Sidhi" comprises of ethics. They in fact are the messages

left by Kavi Yogi to the society. One of his poems which enlightens us is given hereunder.

### YOU

You can be beautiful;
But are you dutiful?
You can have plentiful;
But are you merciful?
You can be a scholar
And an able soldier;
But are you a helper
To the needy brother?
You command growing wealth;
But have you blooming health?
You attain name and fame
But are your passions tame?
You have the worldly tact
But what are you in fact?
Have you clear conscience
Do you think in silence?
Have you learnt inner science?
Ingathered crystal mind
Helps you, yourself to find.

## IV. Conclusion

The age in which Suddharnanda Bharathi lived was marked by momentous changes. Gandhian programmes provided ample opportunity to do service to the society. Kavi Yogi actively took part in national movement and social reforms. As he said every breath would be spent in doing duty, he spent his life worthwhile like a honey bee. He was brisk and industrious till his demise. It must be admitted that we have failed to recognize the great scholar in Shuddhananda Bharathi both during his life and after. Perhaps none other than Shuddhananda could have written such a number of books in various fields in his age. No scholar with the mastery of more than ten languages is so unnoticed by the public like Suddhananda. "The greatest man is he of whom t noisiest world talks the least". So goes the sayir

Kavi Yogi met many eminent personalities li Tilak, Gandhi, Bharathi, Aurabindo, Rajaji, V. Chidambaram Pillai, Thiru Vi. Kalyanasunda Mudaliar, E.V. Ramaswamy Naicker, V.V.S. Iyer a others. He travelled widely and visited many forei countries. Devoted his life for writing, he contribut a lot for the Tamil literary renaissance and the Ta Public. Service must be duly recognised a honoured by every cultured society. The Governm as well as the public must remember him and l service by celebrating his memorial day.

Suddhananda Bharathi failed to produce t disciples to carry out his ideals and messages. W he lacked was that he failed to evaluate his worl Moreover he did not write any work on criticism. I due to paucity of chronological details in his worl one is not able to arrange his conribution in ord Thus, his works suffer from historical authenticity

* * *

### வர்ணிப்பூ

– கே. ரவிச்சந்திரன், III B.Sc., (Phy)

- அன்பே... நீ ...
  தலையில் வைத்தால்
  தாமரைப் பூ ...!
- மணந்தால்
  மல்லிகைப் பூ ...!
- முகர்ந்தால்
  முல்லைப் பூ ...!
- உரசினால்
  ஊதாப் பூ ...!
- அள்ளினால்
  அல்லிப் பூ ...!
- காலில் போட்டிருப்பதோ
  செருப் பூ ...!
- என்னை கறுப்பு என்று
  ஒதுக்கி விடாதே !
  எனக்கும் இருக்கு கற்பு ...!
- அதுவும் ஒரு பூதான்
  அன்பு ...!

# SPORTS DAY



Lighting the Olympic torch



Honouring the President

# ALUMNI ASSOCIATION




President Addresses




Alumini Assn. Meeting


# PARENT TEACHERS ASSOCIATION



Office Bearers on the DAIS



Sri. R. Ganesan, Secretary, PTASSN. Addresses




P. முருகன் என்ற ஸ்டாலின்
II B.Sc., (Maths)

# N.S.S.




National Youth Day



Inaugural Function of Special Camp at Ayyanarkoil





Field work at Special Camp

# YOUTH HOSTELS




Rotary Governor's Visit



Youth Hostels - Tourism Day



Prize Distribution at Special Camp